2016/2017

யூஸுப் அல்-கர்ளாவி

# இஸ்லாமிய சட்டத் தீர்ப்புகள்

3008

ரேஷ்மா பதிப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

78 L-

# REFERENCE LIBRARY

A complete list of Rules and Regulations can be seen on application (Extract from Rules and Regulations)

The Reference Library shall be available to literate members of the public resident in Colombo and over the age of 14 years and shall be open daily from 8 a.m. to 8 p.m. except on Wednesdays, public holidays and any other day or days which the Library Authority may decide

Persons desirous of using the Reference Library must on each occasion, before entering, inform the Library Assistant and obtain his/her permission and on such permission being granted sign the Reference Library Readers' Signature Book in which he/she shall enter his/her full name, age, occupation and address (both private and official) and such signature will be taken and considered to signify assent to these Rules and Regulations.

All books consulted, including those referred to in the next succeeding rule, must be returned to the Library Assistant.

Any book in the Lending Library, except works of Fiction, may be obtained for use in the Reference Library on application to the Library Assistant, but it must be given up if and when required for lending out.

# இஸ்லாமிய சட்டத் தீர்ப்புகள்

**கலாநிதி யூஸுஃப் அல்-கர்ளாவி**

பதிப்பாசிரியர் :

**ஸீ. எம். ஏ. அமீன்**

*B A. (Cey.) Dip. in Hindi, Dip. in Hindi Ling. Appl. (India)*

பொது நூலகம்
கொழும்பு

**ரேஷ்மா பதிப்பகம்**

திஹாரிய, கலகெடிஹேன,

ஸ்ரீ லங்கா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISLAMIC DECREES (Tamil)

Selections Translated from the Arabic

Original, 'Fathaawa Muaasira'
by Dr. Yusuf al-Qaradawi

Edited by - C.M.A. Ameen, *B.A. (Cey.) Dip. in Hindi*
*Dip. in Hindi Ling. Appl. (India)*

Published by - Reshma Publishing House
343/1, Warapalana Road, Thihariya,
Kalagedihena.

Printed by - Developrint, 33 Albion Lane, Colombo-9.

(c) Reshma Publishing House

ISBN 955.95179-1-0

First Edition - November 1989

2 297.1076
23956

23/

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

கலாநிதி யூஸுப் அல்-கர்ளாவி இன்றைய இஸ்லாமிய உலகிலே மாபெரும் சட்ட நிபுணராகக் கருதப்படுகின்றவர்; பரந்த அறிவும், நிறைந்த ஆற்றலும், சட்ட நுணுக்கங்களில் சிறந்த தேர்ச்சியும் மிக்க இவர் எழுதியுள்ள நூல்களுள் "பதாவா முஆஸிரா" (தற்காலத்திற்குரிய மார்க்கத் தீர்ப்புகள்) சிறப்பிடம் பெறுகின்றது. மார்க்க விடயங்களில் தெளிவைப் பெறும் நோக்கத்தோடு அவரிடம் கேட்கப்பட்ட பல வினாக்களுக்குரிய பதில்களை அடக்கியதாக இந்நூல் அமைந்துள்ளது.

விஞ்ஞானம், தொழிநுட்பவியல், மானிடவியல், கலை கலாசாரங்களில் மகத்தான வளர்ச்சி பெற்றுள்ள இன்றைய காலச் சூழ்நிலையில், புதுப்புதுச் சாதனங்களும் கண்டுபிடிப்புகளும் மனித வாழ்விலே மாபெரும் புரட்சியை உண்டுபண்ணியுள்ள இந்த யுகத்திலே, மார்க்க விடயங்கள் தொடர்பாகப் புதுப்புது ஐயங்களும், சிக்கல்களும், பிரச்சினைகளும் எழுவது சகஜம்; இவ்வாறான பிரச்சினைகளுக்கெல்லாம் ஷரீஆவின் வெளிச்சத்தில் நடுநிலை நின்று தீர்ப்பு வழங்கும் திறனை இவரது நூலிலே கண்டுகொள்ளலாம்.

''பதாவா முஆஸிரா'' என்ற பெருநூலிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சில பத்வாக்களை ''இஸ்லாமிய சட்டத்தீர்ப்புகள்'' என்ற பெயரில் இச்சிறு நூல் மொழிபெயர்த்து வழங்குகின்றது. கடுகு சிறிது எனினும் காரம் பெரிது என்பது போல நவயுகத்திற்குரியதும் அன்றாட

வாழ்வோடு தொடர்புடையதுமான மார்க்கப் பிரச்சினைகள் பலவற்றுக்கு இந்நூல் தெளிவான விளக்கம் அளிக்கிறது. உண்மையில், இது ஒவ்வொரு முஸ்லிமின் இல்லத்திலும் இருக்க வேண்டிய ஒப்பற்ற கைந்நூல் என்றாலும் மிகை யாகாது.

இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ள சில பத்வாக்கள் ஏற் கனவே முஸ்லிம் நோக்கு, இஸ்லாமிய சிந்தனை போன்ற இதழ்களில் வெளிவந்தவையாகும். ஆனால் பெரும் பாலான பத்வாக்கள் இலங்கை முஸ்லிம்களைக் கருத்திற் கொண்டு, அவர்களுக்கு மார்க்கத் தெளிவை வழங்கும் நோக் கத்தோடு, தெரிந்து, பொறுக்கி எடுத்து மொழிபெயர்க்கப் பட்டவையாகும். பல்வேறு வேலைகளுக்கும் மத்தியில், சிரமம் கருதாது இவற்றை மொழிபெயர்த்துதவிய ஜாமிஆ நளீமிய்யாவின் விரிவுரையாளர்களுக்கும் உயர் வகுப்பு மாணவர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். தரமான பல இஸ்லாமிய நூல் களை வழங்கி வரும் 'ரேஷ்மா' பதிப்பகம், எதிர்காலத்தில் மேலும் பல நூல்களை வெளியிடுவதற்கு வாசகர்களின் அன் பான ஆதரவை ஆசித்து நிற்கின்றது.

— ஸீ. எம். ஏ. அமீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம் கொழும்பு

# மொழிபெயர்ப்பாளர் அறிமுகம்

1. ஜே. முஹைப்தீன் (24) ஜாமிஆவின் பழைய மாண வரான இவர் ஹெம்மாத்தகமை (மாவனல்லை)யைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மேடைப் பேச்சிலும் வல்லவர் இவர். தற்போது ஸவூதி யில் பணிபுரிகின்றார்.

2. எம். இஸட். எம். நஜ்மான்: நளீமி, பீ. ஏ. (25) வரக்கா பொலையைச் சேர்ந்த இவர் ஜாமிஆ வின் உதவி நூலகராகப் பணிபுரி கின்றார்.

3. எம். எச். எம். தாஹிறா: நளீமி, பீ. ஏ (32) பண்டார கொஸ்வத்தையைச் சேர்ந்த இவர் இலக்கிய ஆற்றல் கைவந்தவர். இவரது ஆக்கங்கள் இலங்கையின் பிரபல பத்திரிகைகளில் வெளி வந் துள்ளன. பண்டாரகொஸ்வத்தை அல்-பத்ர் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றுகிறார்.

4. எஸ். ஏ. கே. அப்துர் றாஸிக் (23) காத்தான்குடியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் ஜாமிஆவின் இறுதி வருட மாண வர். அரபு மூலங்களிலிருந்து மொழி பெயர்ப்பதில் திறமை வாய்ந்த இவர், சிறந்த மேடைப் பேச்சாள ரும் கூட.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. எச். ஐ. எம். ஜகுருல் ஹக்: நளீமி, பீ. ஏ (சிறப்பு) எம்.ஏ (சூடான்) (32) ஜாமிஆவின் விரிவுரையாளரான இவர், சுர் இஸ்லாமிய நூல்களின் ஆசிரியர். அரபு, ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் இருந்தும் மொழிபெயர்க்கும் வல்லமை படைத்தவர். தர்கா நகரைச் சேர்ந்தவர்.

6. வீ. ஐயூப் அலி, நளீமி, பீ.ஏ. (சூடான்) (31) இவர் உடதலவின்னையைச் சேர்ந்தவர். ஜாமிஆவின் விரிவுரையாளர். இவரது மொழிபெயர்ப்புகளும் ஆராய்ச்சிக் கட்டுரைகளும் சிறப்பானவை.

7. எம் நவாஸ் ஸஹுர்தீன் (21) கெற்றகும்புரயைச் சேர்ந்த இவர் ஜாமிஆவின் இறுதி வருட மாணவர். எழுத்துத்துறையிலும் கவிதைத் துறையிலும் சிறந்து விளங்குபவர். மேடைப் பேச்சிலும் வல்லவர். பிரபல பத்திரிகைகளில் இவரது ஆக்கங்கள் வெளியாகியுள்ளன.

8. எம். ஏ. எம் மன்ஸூர் நளீமி, பீ. ஏ. (சிறப்பு) (31) அக்குறணை (கண்டி) யைச் சேர்ந்த இவர் குர்ஆன் விளக்கங்கள் செய்வதில் தலைசிறந்தவர். இவர் பல அரபு நூல்களையும் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் மொழிபெயர்த்திருக்கின்றார். ஜாமிஆவின் விரிவுரையாளராகப் பணிபுரிகின்றார்.

9. எம். எம். அலி ஸப்ரி நளீமி, பீ.ஏ. (26) வில்பொத்தை-மாவனல்லையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தற்போது இவர் குவைட்டில் பணியாற்றுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
கொழும்பு
ந. ச.
கொழும்பு

# பொருளடக்கம்

1. ஸுன்னத்தான தொழுகைகள் ... 1
2. ஸப்பில் இருந்து விலகி மஃமூமாகத் தொழுதல் .. 3
3. சேர்த்துத் தொழுதல் ... 5
4. தொழுகையில் உள்ளச்சம் ... 8
5. கடுகதித் தொழுகை ... 11
6. தொழுகையை விடுபவரின் நோன்பு ... 15
7. நோன்பாளியும் ஊசிமருந்தேற்றலும் . 17
8. மாதவிடாயைத் தடுத்து நோன்பை நோற்றல் . 20
9. சிறுவரும் நோன்பும் ... 22
10. நோன்பாளியும் தொலைக்காட்சியும் ... 23
11. நோன்பை விடுவதற்கான பிரயாண தூரம் ... 26
12. பணத்தில் ஸகாத்தின் அளவைக் கணிக்கும் முறை 30
13. வித்பனைக்காக வாங்கப்பட்ட நிலத்துக்குரிய ஸகாத் 33
14. வசதியுடைய சகோதரர்களுக்கு ஸகாத் கொடுத்தல் 35
15. கால்நடையாகச் சென்று ஹஜ்ஜை நிறைவேற்றுதல் 37
16. ஹஜ்ஜாஜியும் பாவச்செயல்களில் ஈடுபடுதலும் ... 40
17. உள்ஹிய்யா . 42
18. பெரும்பாவங்களும் பாவமன்னிப்பும் . 44
19. செயற்கைக் கொண்டை அணிதல் ... 50
20. முஸ்லிம் பெண்களின் உடை ... 54
21. வங்கியும் சேமிப்புவைப்புக்கான வட்டியும் ... 60

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

## ஸுன்னத்தான தொழுகைகள்

**கேள்வி:**

**ஸுன்னத்தான தொழுகைகளைத் தொழாமல் பர்ளுத் தொழுகைகளுடன் மட்டும் எனது தொழுகைகளைச் சுருக்கிக் கொள்வது ஆகுமா?**

**பதில்:**

நேரம் குறிப்பிடப்பட்ட ஐவேளைத் தொழுகையும் முஸ்லிமான ஆண், பெண்கள், அனைவர் மீதும் கடமையாகும். நபி (ஸல்) அவர்கள் வழமையாகச் சில ஸுன்னத்தான தொழுகைகளைத் தொழுது வந்திருக்கிறார்கள். இந்த ஸுன்னத்தான தொழுகைகளை நிறைவேற்றுவது முஸ்லிம்களுக்கு ஆகுமாக்கப்பட்டுள்ளது.

ஒரு முஸ்லிம் பின்வரும் காரணங்களுக்காக ஸுன்னத்தான தொழுகைகளைப் பேணித் தொழுது வர வேண்டும்.

1 அத்தொழுகைகள் அல்லாஹ்வை நெருங்கச் செய்யும். மேலும், அல்லாஹ்விடத்தில் குறிப்பிட்ட மனிதனுக்குரிய நற்கூலியையும் அதிகரிக்கச் செய்யும். உலகத்தில் மனிதன் வங்கிகளில் தனது சேமிப்பை அதிகரித்துக்கொள்ள முயற்சி செய்கிறான்; அவ்வாறாயின், அல்லாஹ்விடத்தில் தனது நல்லமல்களை அதிகரித்துக்கொள்ள ஏன் முயற்சி செய்யக் கூடாது? இவை தாம் மரணத்தின் பின் அவனுக்குப் பயனளிக்கும். அல்லாஹ் தனது திருமறையில் பின்வருமாறு கூறுகிறான்; "அந்நாளில் பொருளும் மக்களும் யாதொரு பயனுமளிக்கா. ஆயினும், பரிசுத்த உள்ளத்துடன் (தன் இறைவனாகிய) அல்லாஹ்விடம் வருபவன் தான் (சித்தியடைவான்)."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹதீஸ் குத்ஸியில் பின்வருமாறு வருகிறது: ''எனது அடியான் அவனுக்கு விதிக்கப்பட்டுள்ள பர்ளுகளை நிறைவேற்றுவதன் மூலம் என்னை நெருங்குகிறான். மேலும் எனது அடியான், நான் அவனை விரும்பும்வரை நபிலான தொழுகைகளை விட்டுவிடமாட்டான். நான் அவனை விரும்பி விட்டால் அவன் கேட்கக் கூடிய கேள்வியாகவும், பார்க்கக் கூடிய பார்வையாகவும் விரிந்து கொடுக்கக் கூடிய கையாகவும் நான் மாறிவிடுவேன்.

2. மற்றொரு வகையில் பார்க்கும்போது, ஸுன்னத்தான தொழுகைகளை விட்டுவிடுவது நபிகளாரின் முன்மாதிரியைப் புறக்கணிப்பது போலாகும். "நிச்சயமாக உங்களுக்கு அல்லாஹ்விடத்தில் அழகான முன்மாதிரி இருக்கிறது'' என அல்லாஹ் தனது திருமறையிலே கூறுகின்றான். யார் ரஸூல் (ஸல்) அவர்களைப் பின்பற்றுகின்றாரோ, அவர்கள் அன்னாரின் ஸுன்னாவை (வழிமுறையை)ப் பேணிவர வேண்டும்.

நாயகம் (ஸல்) அவர்கள் இந்த ஸுன்னத்தான தொழுகைகளைத் தொடர்ந்து தொழுது வந்திருக்கிறார்கள். எனவே, நாமும் அவற்றை நிலைநிறுத்த வேண்டும்; இல்லாவிட்டால் இந்த ஸுன்னத்தான தொழுகைகள் காலக்கிரமத்தில் அழிந்துவிடும்.

3. ஸுன்னத்துக்கள், பர்ளுகளில் ஏற்படுகின்ற குறைபாடுகளுக்குப் பகரமாகவும் அமைகின்றன. சட்டதிட்டங்களைச் சரியாகக் கடைப்பிடித்து, மிகவும் பேணுதலாக யார்தாம் தொழுகையை நிறைவேற்றுகின்றார்கள்? சில சந்தர்ப்பங்களில் ஒருவனுடைய தொழுகையைப் பல்வேறு சிந்தனைகள் திசை திருப்பி விடலாம், அல்லது அவனுடைய உள்ளத்தில் இறைவன் மீதான பயம் இல்லாமற் போய்விடலாம். சில வேளைகளில் மெதுவாகவும் அமைதியாகவும் தொழவேண்டிய இடங்களில் விரைவாகத் தொழுது விடுவான்.

மறுமையில் ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது செயல்களுக்கான கூலி வழங்கப்படும். முதலில் அவனது தொழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைக்குரிய கூலியே வழங்கப்படும். அவன் தனது தொழு கையைப் பூரணமாகவும் பேணுதலாகவும் நிறைவேற்றி யிருக்கின்ருனு என்று அவதானிக்கப்படும். அப்போது பர்ளுத் தொழுகையின் குறைபாடுகள் நபில் தொழுகைகளைக் கொண்டு பூரணப்படுத்தப்படும். எனவே, ஸுன்னத்தான தொழுகைகள், பர்ளுத் தொழுகையில் ஏற்படக்கூடிய குறை பாடுகளை நிவர்த்தி செய்கின்றன. ஆகவே ஸுன்னத்தான தொழுகைகளைப் பேணித் தொழுது வருவது மிகச் சிறந்த அமலாகும்.

மொழிபெயர்ப்பு: ஜே. முஹுப்தீன்

---

# 2

---

## ஸப்பில் இருந்து விலகி மஃமூமாகத் தொழுதல்

**கேள்வி:**

**இமாம் ஜமாஅத் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது மஃமூம்களின் அணிகளுக்குப் பின்னுலுள்ள கடைசி வரிசை யில் ஒருவர் மாத்திரம் தனித்து நின்று ஒரு ரக்அத்தையோ பல ரக்அத்துகளையோ மஃமூமாகவே தொழுவது கூடுமா?**

பதில்:

அலி இப்னு ஷைபான் (ரலி) அறிவிக்கிருர்: நபி (ஸல்) அவர்கள், ஒருவர் மஃமூம்களின் வரிசைகளுக்குப் பின்னு லுள்ள கடைசி வரிசையில் தனியாக இருந்து தொழுவதைக் கண்டதும், அவர் தொழுது முடிக்கும் வரை காத்திருந்து, அவருடைய தொழுகையை மீட்டித் தொழும்படியும், வரிசை களுக்குப் பின்னுல் நின்று, தனித்து மஃமூமாகத் தொழக் கூடியவரின் தொழுகை நிறைவேருது என்றும் கூறினர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னுமொரு முறை நாயகம் (ஸல்) அவர்கள், ஒருவர் வரிசைகளுக்குப் பின்னால் நின்று மஃமூமாகத் தனியாகத் தொழுவதைக் கண்டு, அவருக்குத் தொழுகையை மீட்கும் படி ஏவினார்கள் மற்றொரு தடவை நபி (ஸல்) அவர்களிடம் இவ்வாறு தனியாகத் தொழக்கூடிய ஒருவரைப் பற்றிக் கேட்கப்பட்டபோது, "அவர் தொழுகையைத் திருப்பித் தொழட்டும்" எனக் கூறினார்கள்.

மேற்கூறப்பட்ட ஹதீஸ்களை இமாம் இப்னு தைமியா போன்றே ஏனைய உலமாக்களும் அங்கீகரித்துள்ளனர். இந்த ஹதீஸ்களை ஆதாரமாகக் கொண்டு, வரிசைகளுக்குப் பின்னால் நின்று தனியாகத் தொழக்கூடிய மஃமூமின் தொழுகை நிறைவேறாது என்பது அறிஞர்கள் சிலரின் தீர்ப்பாகும். இக்கருத்தைத்தான் அந் நஹயீ, இஸ்ஹாக், ஹஸன் பின் ஸாலிஹ், ஹம்மாது, இப்னு அபீ லைலா, வகீஃ போன்றவர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர். இமாம் அஹ்மத் இப்னு ஹம்பல் (ரஹ்)வின் கருத்தும் இதுதான். ஆனால், மற்ற மூன்று இமாம்களான ஷாபிஇ (ரஹ்), அபூ ஹனீபா (ரஹ்), மாலிக் (ரஹ்) ஆகியோர், அம்மனிதரின் தொழுகை நிறைவேறும் என்றும், ஆனால் அது மக்ரூஹ் என்றும் கருத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இஸ்லாம் கூட்டமைப்பையும், ஒழுங்கையும் விரும்புகிறது. கூட்டுத் தொழுகை மூலம் மேற்கூறிய அமைப்பை நிலைநாட்ட விரும்புகிறது. எனவேதான் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுகையின் ஆரம்பத் தக்பீரைக் கூறமுன் மக்களை நோக்கிப் பின்வருமாறு கூறுபவர்களாக இருந்தார்கள்:

(1) "நேராகவும் நெருங்கியும் நில்லுங்கள்".

(2) "உங்களது வரிசைகளை நேராக்கிக்கொள்ளுங்கள்; ஏனெனில், வரிசைகளை நேராக அமைத்துக் கொள்வதில் தொழுகையின் பூரணத்துவம் தங்கியுள்ளது."

(3) "வேறுபட்டு விடாதீர்கள்; (அவ்வாறு வேறுபட்டால்) உங்களது உள்ளங்களும் வேறுபட்டுவிடும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) ''உங்களது வரிசைகளை நேராக அமைத்துக் கொள்ளுங்கள். இல்லாவிடின் ஷைத்தான் உங்களுக்கு மத்தியில் கருத்து வேற்றுமையை ஏற்படுத்திவிடுவான்.''

மேற்கூறப்பட்ட ஹதீஸ்கள் தொழுகையின் கூட்டமைப்பு, இஸ்லாமிய சமூக அமைப்பின் ஒழுங்கு, சமத்துவம், ஒரே திசையை முன்னோக்குதல் போன்றவற்றை வலியுறுத்துகின்றன. எனவே, வரிசைகளுக்குப் பின்னால் நின்று மஃமூமாகவே தனித்துத் தொழக்கூடிய ஒருவரின் தொழுகையை மீண்டும் திருப்பித் தொழுமாறு இஸ்லாம் கேட்பது வியப்புக்குரிய ஒன்றல்ல. ஏனெனில், இது கூட்டமைப்பை விட்டும் பிரிந்து நிற்கும் ஒரு செயலாகும்.

மொழிபெயர்ப்பு: ஜே. முனூப்தீன்.

# 3

## சேர்த்துத் தொழுதல்

**கேள்வி:**

**லுஹர் வேளை முதல் மஃரிப் வரை தொடர்ந்து நடைபெறக் கூடிய ஒரு விழாவின் காரணமாக லுஹர் தொழுகையையும் அஸர் தொழுகையையும் ஒன்றாகச் சேர்த்துத் தொழுவது ஆகுமா?**

**பதில்:**

சில பிக்ஹ் சட்ட அறிஞர்கள் முஸ்லிமான ஆண், பெண் இரு பிரிவினரும் குறிப்பிட்ட சில காரணங்களுக்காக லுஹர்-அஸர் தொழுகைகளையும், மஃரிப் - இஷா தொழுகைகளையும் சேர்த்துத் தொழலாம் எனக் கூறியுள்ளனர். இது மனிதர்களுக்கு இலேசுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒன்றாகும். நபி (ஸல்) அவர்கள் ''பிரயாணம், மழை போன்ற காரணங்களுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காகவும், வேறு காரணங்களுக்காகவும் தொழுகைகளைச் சேர்த்துத் தொழலாம்'' என்று கூறியிருக்கின்றார்கள். இதைப் பற்றி இப்னு அப்பாஸ் (ரலி) விடம் ''வேறு காரணங்களுக்காக என்று சொன்னதன் மூலம் நபி (ஸல்) அவர்கள் எதனை நாடினார்கள்?'' என வினவப்பட்டது. அதற்கு அவர், ''நபி (ஸல்) அவர்கள் தமது உம்மத்திற்குச் சிரமம் ஏற்படக் கூடாது என்பதையே நாடினார்கள்'' என்றார்.

''சில வேளைகளில் பர்ளுத் தொழுகையை அதற்கெனக் குறிப்பிட்ட நேரத்தில் நிறைவேற்றுவது கஷ்டமாக இருந்தால் இரு நேரத் தொழுகைகளை ஒன்று சேர்த்துத் தொழலாம்; ஆனால், அடிக்கடி பிரயாணங்களை மேற்கொள்வதற்காக அதனை வழமையாக்கிக் கொள்ளக்கூடாது'' என்றும் மற்றொரு தடவை கூறியிருக்கின்றார்கள். இது குறைவாக அல்லது அரிதாக நிகழக்கூடிய சந்தர்ப்பங்களில் மாத்திரமே ஆகுமாக்கப்பட்டுள்ளது. இதன் நோக்கம், மனிதன் எதிர் நோக்கக்கூடிய பிரச்சினைகளையும் கஷ்டங்களையும் அவனை விட்டு நீக்குவதாகும்.

உதாரணமாக, ஒரு பொலிஸ் அதிகாரியின் கடமை மஃரிப் தொழுகைக்கு முன்னால் ஆரம்பமாகி இஷாத் தொழுகைக்குப் பின்னால் தான முடியுமென்றிருந்தால் மஃரிப்-இஷா தொழுகைகளை வசதிபோல் முற்படுத்தியோ பிற்படுத்தியோ சேர்த்துத் தொழுது கொள்ளலாம். அதேபோல் ஒரு வைத்தியர் தவிர்க்கமுடியாத சத்திர சிகிச்சையொன்றை மேற்கொள்ளவேண்டியிருப்பதால், குறிப்பிட்ட தொழுகைகளை உரிய நேரத்தில் நிறைவேற்றுவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் கிடைக்காதென்றிருந்தால், அத்தொழுகைகளை முற்படுத்தியோ அல்லது பிற்படுத்தியோ சேர்த்துத் தொழுதுகொள்ளலாம். இவை தனது மக்கள் பாவிகளாகிவிடக்கூடாது என்பதற்காகவும், மார்க்க விடயங்களை இலகுபடுத்த வேண்டுமென்பதற்காகவும், இஸ்லாம் ஏற்படுத்திய சலுகைகளாகும். ஏனெனில், இஸ்லாம் ஓர் இலகுவான மார்க்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து நடைபெறக்கூடிய விழா சம்பந்தப்பட்ட வரை, தொழுகைகளைச் சேர்த்துத் தொழுவதற்கான எந்த வொரு கஷ்டத்தையோ காரணத்தையோ நான் காண வில்லை. இவ்வாறான விழாக்களின்போது தொழுவதற்கான ஒரு சந்தர்ப்பம் கிடைக்காமற் போகாது. தொழுகையை நிறைவேற்றுவதற்கு ஆணாயினும் சரி, பெண்ணாயினும் சரி வெட்கப்படக்கூடாது. தொழுகையைப் பொறுத்தவரை எந்த இடத்திலும் அதை நிறைவேற்றத் துணியவேண்டும். தொழுகையை நிறைவேற்றக் கூடிய ஒருவன், அதை மற்றவர்களுக்கு முன்மாதிரியாகவும் மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டுமென்பதற்காகவும் அதனை நிறைவேற்ற வேண்டும். ஏனெனில், அது அல்லாஹ்வுடைய சடங்குகளில் ஒரு சடங்காகும்; அதை முஸ்லிம்கள் கண்ணியப்படுத்துவதற்காகப் பகிரங்கமாகச் செய்யவேண்டும். அல்லாஹ் குர்ஆனிலே பின்வருமாறு கூறுகின்றான்:

"எவன் அல்லாஹ்வால் ஏற்படுத்தப்பட்ட சடங்குகளைக் கண்ணியப்படுத்துகின்றானோ, அது அவனுடைய உளப் பரிசுத்தத்தையே அறிவிக்கிறது." (22 : 32)

இன்று அதிகமான முஸ்லிம் நாடுகளில் நடைபெறும் உத்தியோகபூர்வமான விழாக்கள், அல்லாஹ்வுடைய கடமையை நிறைவேற்ற விடாமலும், தொழுகையை உரிய நேரத்தில் நிறைவேற்றக் கூடியவர்களைக் கவனத்திற்கொள்ளாமலும் நடாத்தப்படுகின்றமை கண்டிக்கத்தக்கதாகும்.

இவ்வாறான விழாக்களுக்குச் சமுகமளிக்கின்ற அனைவரும் தொழுகையை உரிய நேரத்தில் நிறைவேற்றினால், அத்தகைய விழாக்களை ஏற்பாடு செய்தவர்களுக்கு ஏராளமான கூலி வழங்கப்படும்.

மொழிபெயர்ப்பு : ஜே. முனாப்தீன்

பொது நூலகம் கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

## தொழுகையில் உள்ளச்சம்

**கேள்வி:**

**தொழுகையில் உள்ளச்சம் அவசியமா? உள்ளச்சம் இல்லாத தொழுகை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பது சரியானதா?**

**பதில்:**

தொழுகையில் உள்ளச்சம் இன்மை என்பதன் பொருள், தொழுகின்றவர் தொழுகையில் இல்லையோ எனப் பிறர் எண்ணக்கூடிய வகையில், அளவுக்கு மீறிய செயல்களைப் புரிவதைக் குறிக்கும். தக்க காரணம் எதுவுமின்றி உடம்பைச் சொறிதல், அடிக்கடி கைக்கடிகாரத்தைப் பார்த்தல், அதனைச் சரிப்படுத்துதல், திரும்பிப் பார்த்தல், தலைப்பாகை, பெல்ட் போன்றவற்றை அடிக்கடி சரிப்படுத்தல் ஆகிய இன்னோரன்ன செயல்களை நாம் அதிகமானோரிடத்திலே காணலாம். இதுபோன்ற தேவையற்ற செயற்பாடுகள் அதிகரிக்கும்போது அது தொழுகையை முறித்துவிடும் என்பதில் சந்தேகமில்லை. தொழுகையின் பெறுமதியை உணர்ந்து, அதன் கீர்த்தியையும் உயர்வையும் மானசீகமாக அறிந்து கௌரவித்து, இதயசுத்தியோடு இறைவனைத் தியானிக்கின்ற ஒரு முஸ்லிமிடத்தில் இத்தகைய பண்புகள் இருக்கவே கூடாது. அவன் இத்தகைய பிரச்சினைகளுக்கு உள்ளாகவும் மாட்டான்.

சிறிது நகர்ந்தால் அல்லது சிந்தனையைத் தொழுகையில் முற்றாக ஒருமுகப்படுத்தாவிட்டால் அல்லது உள்ளம் தொழுகையில் நிலைத்திருக்காவிட்டால் தொழுகை முறிந்துவிடாது என்றாலும் தொழுகையின் உயிரோட்டம் இல்லாமற் போய்விடும். ஏனெனில், தொழுகையின் உயிரோட்டமே உள்ளச்சத்தில்தான் தங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளச்சத்தைப் பற்றி இறைவன் குர்ஆனிலே குறிப்பிடும்போது, தொழுகையில் உள்ளச்சத்தைக் கடைப்பிடித்த முஃமீன்கள் வெற்றி பெற்றுவிட்டார்கள் என்று கூறுகின்ருன். உள்ளச்சம் என்பது உள்ளத்தில் ஏற்படும் அச்சம் என்றும், உடலுறுப்புகளில் ஏற்படும் அச்சம் என்றும் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படும். இறைவன் தன்னைச் சதாவும் அவதானித்துக்கொண்டிருக்கின்ருன் என்ற உண்மையை உள்ளத்தில் ஏற்படுத்திக்கொள்வதே உள்ளச்சமாகும்.

இந்த உணர்வை ஒருவன் பெறவேண்டுமாயின், தொழுகையில் ஓதப்படுகின்ற அல்-குர்ஆன் வசனங்களின் பொருளை உணர்ந்து செவிமடுக்கவேண்டும். அதேபோல் தொழுகையில் ஓதுகின்ற தஸ்பீஹ்களின் பொருளை விளங்கி ஓத வேண்டும். அப்போதுதான் சர்வசக்தியும் மிக்க இறைவனின் முன்னுல் நிற்பதான உணர்வு ஏற்படும். அவ்வாறே தொழுகை என்பது வீணன பொடுபோக்குகளை விட்டும் தூய்மையானது என்பதையும் உணரமுடியும்.

ஸலபுஸ் ஸாலிஹீன்களில் ஒருவரான ஹாதிமுல் அஸம் என்பவரிடம் "நீங்கள் எவ்வாறு தொழுகின்றீர்கள்?", என்று வினவப்பட்டபோது அவர் பின்வருமாறு கூறினுர்:

"நான் தக்பீர் கட்டும்போது மிகவும் பேணுதலோடு கட்டுவேன். மிகவும் ஒழுங்காக ஸூராக்களை ஓதுவேன். உள்ளச்சத்தோடு ருகூஉ செய்வேன். மிகவும் பணிந்தவனுக ஸுஜூது செய்வேன். சுவனம் எனது வலப்பக்கத்திலும் நரகம் எனது இடப்பக்கத்திலும் 'ஸிராத்' என்னும் பாலம் எனது பாதங்களின் கீழ் இருப்பதாகவும், கஃபா எனது புருவங்களுக்கு மத்தியில் இருப்பதாகவும் நினைத்துக்கொள்வேன். எனது தலைமீது இஸ்ராயீல் (அலை) இருப்பதாகவும், எனது பாவங்கள் என்னைச் சூழ்ந்திருப்பதாகவும், இறைவன் என்னை உற்றுநோக்கிக் கொண்டிருக்கின்ருன் என்றும் எண்ணிக்கொள்வேன். எனது வாழ்க்கையில் நான் தொழும் இறுதித்தொழுகை இதுதான் என்றும் கருதிக்கொள்வேன். என்னுல் முடிந்தவரை தொழுகையில் தூய்மையைக் கடைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிப்பேன். இறுதியாக ஸலாம் கொடுத்து முடித்துவிடு வேன். என்றாலும், எனது இந்தத் தொழுகையை இறைவன் ஏற்றுக்கொள்வானோ அல்லது 'இந்தத்தொழுகையை நிறை வேற்றியவனின் முகத்திலே எறிந்து விடுங்கள்' என்று கூறி விடுவானோ என்று அஞ்சுகிறேன்."

ஓர் உண்மை முஸ்லிமின் பண்பு இவ்வாறுதான் அமைய வேண்டும். தொழுகையின் போது அவனது சிந்தனை ஒரு முகப்படவேண்டும். அவனது உள்ளம் தொழுகையில் நிலைத் திருக்கவேண்டும். பல பிரச்சினைகள் ஒன்றுசேர்ந்து சிந்தனை யைக் குழப்பக்கூடும். அப்போது அப் பிரச்சினைகளை உள்ளத் திலிருந்து அகற்றிவிட வேண்டும். உள்ளச்சத்தை ஏற் படுத்தக்கூடிய இடத்திலே தொழுவதும், தொழுகையின் போது ஓதுகின்ற குர்ஆன் வசனங்களையும் திக்ருகளையும் பொருளுணர்ந்து ஓதுவதும் உள்ளச்சத்தை ஏற்படுத்தும்.

'உள்ளம் பயந்து விட்டால் அது உடலுறுப்புகள் பயந் தது போல்தான்' என்ற பழமொழிக்கேற்ப உள்ளத்தில் ஏற் படுகின்ற அச்சத்தின் பிரதிபலிப்புகள் உடலுறுப்புகளினூ டாக வெளிப்படும்போது அதனை நாம் உடலுறுப்புகளின் அச் சம் என்று கூறுவோம்.

சுருங்கக் கூறின், தொழுகையில் வீணாகத் திரும்புதல், சிறு குழந்தைகளைப் போன்று ஓடித்திரிதல் அல்லது வீணாக அசைந்தாடுதல் போன்றன தொழுகையின் உயிரோட்டத் தைக் கெடுத்து, உள்ளச்சத்தையும் அகற்றிவிடும். எனவே, தொழுகையின் போது இறைவனின் முன்னிலையில் நிற் கிறேன் என்ற உணர்வோடு நிற்கவேண்டும். இதனையே தொழுகையும் வேண்டி நிற்கிறது.

மொழிபெயர்ப்பு : எம். நவாஸ் ஸஹ்ரூர்தீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

## கடுகதித் தொழுகை

**கேள்வி!**

**தராவீஹ் தொழுகையினை மிக அவசரமாக நிறைவேற்றுவது பற்றிய சரியான தீர்ப்பு என்ன?**

பதில்:

யார் பூரண இறை நம்பிக்கையோடு இறைவனிடமே நற்கூலியை எதிர்பார்த்தவனாக ரமழான் மாதத்தில் நின்று வணங்குகிறானோ, அவனது முன்பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படும் என்ற இந்த ஹதீஸ் – புகாரி, முஸ்லிம் ஆகிய இரு கிரந்தங்களிலும் பதிவாகியுள்ளது.

அல்லாஹ் ரமழான் மாதத்தின் பகல் வேளைகளிலே நோன்பு நோற்பதைக் கட்டாயக் கடமையாக்கியுள்ளான். அவ்வாறே நபிகளாரின் மூலம், ரமழான் மாதத்தின் இரவு வேளைகளில் நின்று வணங்குவதை உறுதிப்படுத்திய அல்லாஹ், அந்த வணக்க வழிபாடுகளை மனிதன் புரியக்கூடிய குற்றங்களையும் பாவங்களையும் போக்கக்கூடிய ஒரு கருவாயாக ஏற்படுத்தியுள்ளான். எனினும், பாவக் கறைகளைப் போக்குகின்ற வணக்க வழிபாடு என்பது உரிய முறையில், அனைத்து வரையறைகளும் பேணப்பட்டு நிறைவேற்றப்பட்ட சம்பூரணமான தொழுகைகளையே குறிக்கின்றது.

தொழுகையில் ருகூஉ, ஸுஜூது போன்ற நிலைகளில் சற்று நேரம் தரித்திருப்பது அத்தொழுகை நிறைவேறுவதற்குரிய பர்ளுகளில் ஒன்றாகும். ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் தமது முன்னிலையில் ஒருவர் தொழுகைக்குரிய விதிமுறைகளைப் பேணி, ருகூஉ, ஸுஜூது போன்ற நிலைகளில் ஒழுங்காகத் தாமதித்துச் சரியான முறையில் தனது தொழுகையை நிறைவேற்றுவதைக் கண்டபோது, “நீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பவும் உமது தொழுகையை நிறைவேற்றும்; ஏனெனில், நீர் முறையாகத் தொழவில்லை'' எனக் கூறிய நபி (ஸல்) அவர்கள், பூரணமான தொழுகை எவ்வாறு அமைய வேண்டும் என்பதை அவருக்குப் பின்வருமாறு கற்றுக்கொடுத்தார்கள்: "நீர் ருகூஉ செய்யும் போது அதில் தாமதிக்கின்ற அளவு ருகூஉ செய்ய வேண்டும்; அதேபோல் நிலைக்கு வருகின்ற போது அதிலும் நீர் தாமதிக்க வேண்டும்; நீர் ஸுஜூது செய்யும்போது அதிலே தாமதிக்கக்கூடிய வகையில் உமது ஸுஜூதை அமைத்துக்கொள்ள வேண்டும்; அவ்வாறே இரு ஸுஜூதுகளுக்குமிடையே உட்காரும் வேளையில் அதில் தாமதிக்க வேண்டும்; இந்த வகையிலே உமது தொழுகையை அமைத்துக்கொள்ள வேண்டும்.''

எனவே, தொழுகையில் மேற்குறிப்பிட்ட நிலைகள் அனைத்திலும் தாமதிக்க வேண்டியது கட்டாயமான ஒரு நிபந்தனையாகும். ஆனால், எந்தளவு தாமதிக்க வேண்டும்? அதற்குரிய காலவரையறை என்ன? என்ற விடயத்தில் உலமாக்களுக்கிடையில் கருத்து வேறுபாடு நிலவுகிறது.

சில உலமாக்கள் குறைந்தபட்சம் "ஸுப்ஹான ரப்பியல் அஃலா வபிஹம்திஹி'' என்ற தஸ்பீஹை ஒரு தடவை ஓதக் கூடிய நேரமளவிற்குத் தாமதிக்க வேண்டும் எனக் கூறியுள்ளனர். ஆனால், 'ஷெய்குல் இஸ்லாம்' என அழைக்கப்படும் இமாம் இப்னு தைமியா போன்ற பல இமாம்கள், மேற் கூறப்பட்ட தஸ்பீஹை மூன்று முறை ஓதக்கூடிய நேரமளவிற்காவது ருகூஉவிலும், ஸுஜூதிலும் தாமதிக்க வேண்டும் எனக் கூறியுள்ளனர். ஏனெனில், ஹதீஸ்களிலும் மூன்று முறை தஸ்பீஹ் செய்யவேண்டும் என்றே வந்துள்ளது. எனவே, ருகூஉ, ஸுஜூது போன்ற நிலைகளில் மூன்று முறை தஸ்பீஹ் ஓதக்கூடியளவு தாமதிக்க வேண்டியது அவசியமாகும்.

அல்லாஹ் தனது திருமறையில் "தங்களது தொழுகையை பயபக்தியோடு நிறைவேற்றக்கூடிய முஃமீன்கள் வெற்றியடைந்துவிட்டார்கள்'' எனக் கூறுகிறான். உண்மையில், பயபக்தி என்பது இருவகைப்படும்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) உடல் ரீதியான பயபக்தி

(2) உள ரீதியான பயபக்தி

உடல் ரீதியான பயபக்தி என்பது ஒருவன் தான் தொழுகின்ற வேளைகளில் எவ்வித விளையாட்டிலும் ஈடுபடாமலும், தன் பார்வையை அங்கிங்கு செலுத்தாமலும், ஒவ்வொரு செயலையும் அவசர அவசரமாகச் செய்யாமலும், இறைவன் வகுத்துள்ளபடி அத்தொழுகையின் நிபந்தனைகளையும் வரையறைகளையும் பேணி, அமைதியாகத் தொழுவதையே குறிக்கிறது.

உள ரீதியான பயபக்தி என்பது தொழும்போது அல்லாஹ்வை ஞாபகப்படுத்துவதிலே உள்ளத்தை ஒருமுகப் படுத்துவதாகும். தொழுகையில் ஈடுபடும் போது அல்லாஹ்வின் முன்னிலையில் நிற்பதான உணர்வை ஏற்படுத்திக்கொள்வதன் மூலமும், மறுமை பற்றிய சிந்தனையில் இலயித்து இருப்பதன் மூலமும், ஓதக்கூடிய குர்ஆன் வசனங்களின் பொருளை ஆழ்ந்து நோக்குவதன் மூலமும் உள்ளச்சம் ஏற்பட முடியும். எனவே, ஒருவனது தொழுகை பரிபூரணமானதாக அமைய வேண்டுமாயின் உடல், உள ரீதியான பயபக்தியும் இறையச்சமும் இன்றியமையாதனவாகும்.

தனது அடியான் வணங்குகின்ற வேளையில், அல்லாஹ் அவனது வேண்டுதல்களுக்கு விடையளிப்பதாகவும், அவனோடு உரையாடுவதாகவும் ஹதீஸ் குத்ஸியில் குறிப்பிடப் படுகிறது எனவே, ஒருவன் தொழுகையை நிறைவேற்றுகின்ற போது அதன் ஒவ்வொரு நிலையிலும் இறைவனை நினைவுபடுத்தியவனாக அமைதியாகச் செயல்படவேண்டியது அவசியமாகும். மாறாக, எப்படியாவது தொழுகையை அவசரமாக முடித்துவிட வேண்டுமென்ற நோக்கத்துடன் மிக விரைவாகத் தொழப்படக்கூடிய தொழுகை சம்பூரணமானதாக அமையாது.

பெரும்பாலானோர் ரமழான் மாதத்திலே குறிப்பிட்ட சில நிமிடங்களில் தராவீஹ் தொழுகையின் இருபது ரக்அத்துக்களையும் தொழுது முடிக்கின்றார்கள். முடிந்தளவு விரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக அத்தொழுகையை நிறைவேற்றுவதே அவர்களுடைய நோக்கமாகும். இந்நிலையில் தொழுகையின் ருகூஉ, ஸுஜூது போன்றவைகள் ஒழுங்காகப் பேணப்படாதது மட்டுமன்றி உள்ளச்சமற்ற ஒரு தொழுகையாகவும் அஃது அமைந்துவிடுகிறது.

சம்பூரணமாக நிறைவேற்றப்படாத தொழுகை, இருண்டு கறுத்த ஓர் உருவமாக மாறி, அத்தொழுகையை நிறைவேற்றியவனை நோக்கி, "நீ என்னை வீணாக்கியது போன்று அல்லாஹ் உன்னையும் வீணாக்குவானாக" எனக் கூறிவிட்டு வானத்தை நோக்கி உயர்ந்து செல்லும் என்பதாக ஹதீஸில் குறிப்பிடப்படுகிறது. மாறாக, ஒருவன் பயபக்தியோடு நிறைவேற்றக்கூடிய தொழுகை பிரகாசமான ஒரு வெண்ணிற உருவமாக அவனை நோக்கி, "நீ என்னைப் பேணிப்பாதுகாத்தது போல் அல்லாஹ் உன்னையும் பாதுகாப்பானாக" எனக்கூறிவிட்டு மேலே செல்கிறது.

எனவே, தராவீஹ் தொழுகையை நிறைவேற்றக் கூடிய இமாம்களுக்கும் ஏனையோருக்கும் நான் கூறக்கூடிய உபதேசம் இதுதான்: உடல், உள ரீதியான அச்சம் இல்லாமல் அவசர அவசரமாக இருபது ரக்அத்துக்கள் தராவீஹ் தொழுகையை தொழுவதை விட, மிக அமைதியாக, பயபக்தியோடு நீங்கள் எட்டு ரக்அத்துக்கள் தொழுவது மிகவும் சிறந்ததாகும்; ஏனெனில், எந்தவொரு தொழுகையும் அதன் ரக்அத்துக்களின் எண்ணிக்கையைக் கொண்டு கணிக்கப்படுவதில்லை; மாறாக, அது எந்தளவு பயபக்தியுடனும் சிறந்த முறையிலும் நிறைவேற்றப்படுகின்றது என்பதைக்கொண்டே மட்டிடப்படுகின்றது.

மொழிபெயர்ப்பு: எஸ். ஏ. கே. அப்துர் ராஸிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

## தொழுகையை விடுபவரின் நோன்பு

**கேள்வி:**

**தொழுகையை விடுபவனின் நோன்பு ஏற்றுக்கொள்ளப் படுமா? ஒன்றுடன் ஒன்று இணைந்த நிலையில் இருக்கும் இஸ்லாமிய இபாதத்களில் ஒன்றை விட்டு விட்டு ஒன்றைச் செய்தால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பது சரி யானதா?**

பதில்:

ஒரு முஸ்லிமைப் பொறுத்தவரை இஸ்லாத்தின் ஐம் பெரும் கடமைகளையும் நிறைவேற்றுவது அவனது கடமை யாகும். இவ்வகையில் ஒரு முஃமீன் தொழுகையை நிறை வேற்றுவான்; ஸகாத்தையும் கொடுத்து வருவான்; ரம ழான் மாதங்களில் நோன்பு நோற்கவும் தவறமாட்டான்; வசதியிருப்பின் ஹஜ்ஜையும் நிறைவேற்றுவான்;

தக்க காரணமின்றி இவற்றில் ஒன்றை விடுபவனின் நிலைபற்றி அறிஞர்களிடையே பல்வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. சிலர் இவற்றில் ஒன்றை விடுவதும் குப்ரை விளைவிக்கும் என்கின்றனர். வேறு சிலர், தொழு கையை நிறைவேற்றாமல் ஸகாத்தை மறுப்பதும் குப்ருக்கு வழிவகுக்கும் என்பர். இன்னும் சிலர், தொழுகையை மட் டும் விட்டுவிடுவதுகூட குப்ரை விளைவிக்கும் என்கின்றனர். ஏனெனில், "ஒரு முஸ்லிமையும் காபிரையும் பிரித்துக்காட்டு வது தொழுகையாகும்." (முஸ்லிம்) என்ற நபி மொழி தொழுகையின் அந்தஸ்தைச் சுட்டிக்காட்டுகின்றது.

தொழுகையை விட்டதன் மூலம் காபிராக மாறியவ னின் நோன்பு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறிய அறிஞர்கள், அதற்கு ஒரு காபிர் செய்யும் வணக்க வழிபாடுகள் சிறந்தனவாக இருப்பினும், அது இறைவனிடத்தில் எப்பயனையும் ஈட்டிக்கொடுக்காது என்ற கருத்தினை முன்வைக்கின்றனர்.

மற்றும் சில அறிஞர்கள், இறைவனையும் அவனது தூதரையும் நம்புவதுடன் அல்லாஹ் விதியாக்கிய இஸ்லாமிய வழிபாடுகளான தொழுகை, ஸகாத் போன்றவற்றை மறுப்பதோ அல்லது அவற்றில் சந்தேகப்படும் இயல்போ இல்லாத ஒருவன், மேற்கூறிய கடமைகளை நிறைவேற்றுவது ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமை என்று நம்புகின்ற அதேவேளை, அவற்றை மறுக்காமலும் இருப்பின் அவன் காபிராகக் கருதப்படாது பாஸிக்காக - பெரும்பாவியாக மதிக்கப்படுவான் எனக் கூறுகின்றனர்.

மேற்குறிப்பிட்ட கருத்தே உண்மையானதாகவும் சரியானதாகவும் இருக்கமுடியும். இந்த வகையில் நோக்கின் சோம்பலினாலும் அசிரத்தையினாலும் தொழுகையை விட்டுவிடுவது குப்ருக்கு வழிகோலாது. மாறாக, அது ஒருவனது ஈமானிலே பலவீனத்தைத் தோற்றுவிக்கும். ஆனால், இந்நிலையில் அவன் தொடர்ந்திருந்தால் அதன் விளைவுகள் மிக மோசமானதாக அமையலாம். தொழுகையையோ அல்லது வேறு ஒரு பர்ளான கடமையையோ ஒருவன் மறுத்தாலும் அல்லது பரிகசித்தாலும் அவன் இஸ்லாத்தை விட்டும் நீங்கிவிடுவான். ஒவ்வொருவனதும் நல்லமல்களுக்கான கூலியை இறைவன் அளிக்கத் தவறமாட்டான். அவ்வாறே பாவம் செய்தால் அதற்குரிய தண்டனையை வழங்கவும் தயங்கமாட்டான். எனவே, ஒவ்வொருவனும் தத்தம் செயல்களுக்கேற்பவே கூலியைப் பெற்றுக் கொள்வான் என்பதைக் கீழ்வரும் திருவசனங்கள் விளக்குகின்றன:

"அவர்கள் செய்கின்ற ஒவ்வொரு காரியமும் (அவர்களுடைய) குறிப்பேடுகளில் இருக்கின்றது. சிறிதோ பெரிதோ யாவுமே (அதில்) வரையப்பட்டிருக்கும்.

(54; 52- 53)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆகவே, எவன் ஓர் அணுவளவு நன்மை செய்திருந்தானோ அவன் (அங்கு) அதனையும் கண்டுகொள்வான். (அவ்வாறே) எவன் ஓர் அணுவளவு தீமை செய்திருந்தானோ அதனையும் அவன் (அங்கு) கண்டு கொள்வான்.''

(99: 7-8)

இவ்வகையில் நோக்கும்போது தொழுகையை விடுபவன் அதற்குரிய பிரதிபலனை இறைவனிடத்தில் பெற்றுக்கொள்வான் என்பதும், அவன் நோற்ற நோன்பு ஏற்றுக்கொள்ளப்படும் என்பதும் தெளிவாகிறது. ஏனெனில், ஒவ்வொரு மனிதனும் செய்யும் நற்கருமங்களுக்கு இறைவன் கூலி வழங்கத் தவறமாட்டான். ஒரு பர்ளான கடமையை விட்டுவிட்டு இன்னொன்றை நிறைவேற்றுவது பயனளிக்கமாட்டாது என்பது பிழையான ஒரு கருத்தென்பதை மேற்கூறிய திருவசனங்கள் தெளிவுபடுத்துகின்றன.

மொழிபெயர்ப்பு: எம். நவாஸ் ஸனூர்தீன்

7

## நோன்பாளியும் ஊசி மருந்தேற்றலும்

**கேள்வி:**

**புனித ரமழான் மாதத்தின் பகல் வேளைகளில் ஒரு நோயாளி ஊசி மருந்து செலுத்திக் கொள்வது, கண்களில் சுர்மா போடுவது, காதில் மருந்துத் துளி விடுவது என்பன ஆகுமா?**

**பதில்:**

ஊசியேற்றுவதில் பல வகையுண்டு. நோய்க்குப் பரிகாரமாக மருந்தை உட்செலுத்துவது அவற்றில் ஒன்றாகும். இவ்வகையான ஊசிமருந்துகள் நரம்பிலோ அல்லது தசையிலோ அல்லது தோலிலோ எங்கு செலுத்தப்பட்டாலும் அது குடலைச் சென்றடையாது; உணவாகவும் மாட்டாது. எனவே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது நோன்பாளியின் நோன்பை முறிக்க மாட்டாது. இதில் வித்தியாசமான வேறெந்தக் கருத்தும் கிடையாது.

உணவை உடலிற் சேர்க்கும் வகையான ஊசிகளும் உண்டு. குளுகோஸ், ஊசியின் மூலம் உட்செலுத்தப்படுவதை இதற்கு உதாரணமாகக் கூறலாம். இது உணவாக மனிதனின் உடம்பிலே உடனடியாகச் சேர்ந்துவிடுகிறது.

இதுபற்றி இன்றைய உலமாக்களிடையே கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஏனெனில், முற்கால அறிஞர்கள் இத்தகைய நிவாரணக் கருவிகள், வழிவகைகள் பற்றி அறிந்திருக்கவில்லை. இறைதூதரோ, அவர்களின் தோழர்களோ, தாபிஈன்களோ, அவர்களைத் தொடர்ந்து வந்தவர்களோ இவ்விடயம் குறித்து எதுவும் பேசவில்லை. ஏனெனில், இது ஒரு நவீன விடயம். இதனால் தான் இன்றைய உலமாக்கள் இது பற்றி கருத்துவேறுபாடு கொள்கின்றனர்.

இந்த உலமாக்களிற் சிலர், மேற்படி ஊசியின் மூலமான (உணவு) உட்செலுத்தல் நோன்பை முறித்துவிடும் என்கின்றனர். ஏனெனில், அது நேரடியாக இரத்தத்துடன் கலப்பதால் உணவாகிறது என இவர்கள் கூறுகின்றனர்.

மற்றும் சில உலமாக்கள், இது இரத்தத்துடன் சேர்ந்தாலும் நோன்பை முறிக்காது; ஏனெனில், (இவ்விடயத்தில்) எவை குடலை அடைகின்றனவோ அவையும், எதன் மூலம் ஒருவன் தன் வயிறு நிறைந்ததாக அல்லது தாகம் தீர்ந்ததாக உணர்கிறானோ அதுவும் தான் நோன்பை முறிக்கும் எனக் கூறுகின்றனர்; நோன்பின் போது வயிற்றின் தேவையையும், பாலியல் இச்சையையும் கட்டுப்படுத்திக் கொள்வது கடமையாகிறது. ஆகவே, மனிதன் பசியினதும் தாகத்தினதும் உணர்வை அனுபவிக்கிறான். இந்த வகையில் உணவை உட்செலுத்தும் ஊசிகளினால் பாதிப்பில்லை; அது நோன்பை முறிக்காது என இவர்கள் கூறுகின்றனர்.

இந்த இறுதிக் கருத்தையே நானும் ஆதரிக்கிறேன். இருப்பினும் ஒரு முஸ்லிம் நோன்பு மாதத்தின் பகல் வேளைகளில் இத்தகைய ஊசிகள் ஏற்றுவதைத் தவிர்ந்து கொள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வது எல்லா வகையிலும் சிறந்ததாகும். இவற்றை நோன்பு வேளையிலன்றி, இரவு நேரத்தில் செலுத்திக் கொள்ள முடியும். மேலும், ஒருவன் நோயாளியாக இருப்பின் அவனுக்கு நோன்பு நோற்காமலிருக்க இறைவன் அனுமதியளித்துள்ளான். உணவு உட்செலுத்தப்படும் ஊசியால் நேரடியாக உணவோ நீரோ ஏற்றப்படாவிட்டாலும், அதனால் பசி, தாக உணர்வு நீக்கப்படாவிட்டாலும் குறைந்தது புத்துணர்வையாவது பெறக்கூடியதாக இருக்கும். ஒரு நோன்பாளி வழமையாக அடையும் உணர்வுகளை, களைப்பை இது நீக்கி விடக்கூடியதாகும்.

நோன்பின் மூலம் மனிதன் பசி, தாக உணர்வுகளையும், அல்லாஹ்வின் அருட்கொடைகளின் பெறுமதியையும் உணர வேண்டும் என்பதையே அல்லாஹ் விரும்புகிறான். அவ்வாறே துன்பப்படுவோர்களின் கஷ்டத்தையும் நோயாளிகளின் பிணியையும் உணர்ந்து அச்சப்பட வேண்டும் என்பதையே எதிர்பார்க்கிறான். எனவே, இத்தகைய ஊசிகளைச் செலுத்த அனுமதிக்கப்பட்டால் அது பணபலம் படைத்தவர்களுக்கு நோன்பு காலத்தின் பகல் வேளைகளில் அவற்றை ஏற்றிக் கொள்ளவும், அதன் மூலம் உடற் சக்தியையும் புத்துணர்வையும் பெற்றுக்கொள்ளவும் வாய்ப்பாக அமையும். மேலும், நோன்பின் கஷ்டத்தையோ பசியின் துன்பத்தையோ அஃது அதிகமாக உணரச் செய்யாது. எனவே, இத்தகைய ஊசிகளை ஒரு நோன்பாளி நோன்பு திறந்த பின் செலுத்திக்கொள்வதே மிகச் சிறந்ததாகும்.

இவ்வாறே ரமழான் மாதத்தின் பகல் வேளைகளில் காதினுள் மருந்து வைத்தல், மருந்துத் துளிகளை விடுதல், சுர்மா போடுதல், 'வஸ்தி' பண்ணப்படுதல் போன்றன பற்றி உலமாக்களிடையே கருத்து வேறுபாடு உண்டு. இவற்றில் சில, சில வேளைகளில் வயிற்றை அடையக் கூடும். அடையாமல் இருக்கவும் கூடும். வயிற்றை அடைந்தாலும், அது ஒரு பொருள் வாய் வழியாக வயிற்றைச் சேர்வது போன்றோ அல்லது அஃது ஏற்படுத்தும் பிரயோசனம் போன்றோ உடல் தெம்பை அளிக்காது; எனவே, அது நோன்பை முறிக்காது எனக் கூறுகின்றனர். இக்கருத்தையே நானும் ஆதரிக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறே கண்ணில் விடப்படும் மருந்துத் துளிகளோ, உடலிற் பூசப்படும் தைலம், 'பாம்' போன்றவையோ நோன்புக்குப் பாதகம் ஏற்படுத்தாது. இமாம் இப்னு தைமியா கூட தனது 'பதாவா'வில் இக்கருத்தையே தெரிவிக்கிறார். ஏனெனில், ஆரம்ப காலம் முதல் கண்ணுக்கு சுர்மா போடுதல், காதுக்கு மருந்து ஊற்றுதல் போன்றன மக்களிடம் நடைமுறையில் இருந்தன. ஆனால், இறைதூதர் (ஸல்) அவர்கள் நோன்பை முறிக்கும் காரியங்களாக இவற்றைக் கூறவில்லை. இது போன்றே எண்ணெய் தேய்த்தல், சாம்பராணி புகைத்தல், வாசனைத் திரவியங்களைப் பாவித்தல் என்பன நோன்புக்கு எத்தகைய பாதகத்தையும் ஏற்படுத்தமாட்டாது.

மொழிபெயர்ப்பு: எம். எச். எம். தாஹா, நளீமி, பீ.ஏ.

---

# 8

---

## மாதவிடாயைத் தடுத்து நோன்பை நோற்றல்

**கேள்வி:**

**ரமழான் மாதம் சிறப்பு மிக்கது என்பதை நாம் அறிவோம். இக்காலத்தில் தொழுகை, நோன்பு என்பவற்றைச் சிறந்த முறையில் பேண விரும்புகிறோம். ஆதலால், (பெண்களாகிய) எமக்கு மாதவிடாயைப் பிற்படுத்தும் மாத்திரைகளைப் பாவித்து, தொடர்ந்து நோன்பு நோற்க முடியுமா?**

பதில்:

ரமழானில் ஒரு முஸ்லிம் பெண்ணுக்கு வழமையான மாதாந்த ருது ஏற்படலாம். இவ்வேளையில் அவள் நோன்பு நோற்கக்கூடாது. பின்பு அவற்றை அவள் 'களா' செய்ய வேண்டும். இது மாதாந்த ருது ஏற்படும் பெண்களின் உடற்களைப்புத் தீரவும், நரம்புகள் உறுதியடையவும் அல்லாஹ் அளிக்கும் நிவாரணமும் ரஹ்மத்துமாகும். எனவே, அவள் இக்காலத்தில் நோன்பு நோற்கலாகாது. இதனை மீறி அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோன்பு நோற்ருல் அது ஏற்றுக்கொள்ளப்படவோ அதற்குக் கூலி வழங்கப்படவோ மாட்டாது. இந்நாட்களுக்காக அவள் பின்னர் நோன்பைக் 'களா' செய்ய வேண்டும்.

இவ்வாறுதான் நபிகளாரின் காலத்துப் பெண்களும், நபியவர்களின் பிராட்டிமார்களும், ஸஹாபிப் பெண்களும், அவர்களைத் தொடர்ந்து வந்த பெண்களும் செய்து வந்தார்கள் எனவே, ஒரு முஸ்லிம் பெண் இவ்வாறு நடந்து கொள்வதே சிறப்பானது.

ஹஸரத் ஆயிஷா (ரலி) அறிவிக்கிருர்: "நாம் நோன்பை (மாதவிடாய் காலத்தில் விட்டு) 'களா' செய்யுமாறு ஏவப்பட்டோம். ஆனல் தொழுகையைக் 'களா' செய்ய வேண்டுமென ஏவப்படவில்லை."

பொதுவாக இயற்கை நியதிகளுக்கேற்பத் தமது செயல்களை ஒழுங்குபடுத்திக் கொள்வதுதான் சிறந்தது. எனவே, எப்போதெல்லாம் இந்த மாதாந்த ருது பெண்களுக்கு இயற்கையாக நிகழ்கின்றதோ, அப்போது அதனை அல்லாஹ் ஏற்படுத்தியது போன்று விட்டுவிடுவதுதான் நல்லது. எனினும், தற்போது பிரபல்யமாக இருப்பது போன்ற, மாதாந்த ருதுவைப் பிற்படுத்தும் வில்லைகள் அல்லது கருவிகள் ஏதாவது இருந்து, அதனைப் பயன்படுத்துவதன் மூலம் தமது மாதாந்த ருதுவைப் பிற்படுத்தி, அதனல் நோன்பை இடையில் சில நாட்கள் விட்டுவிடாது தொடர்ந்து நோற்க ஒரு பெண் விரும்பினுல் ஒரு நிபந்தனையுடன் அதனை அனுமதிக்கலாம். அதாவது அந்த வில்லைகள் அல்லது கருவிகளின் பாவனையில் எவ்விதத் தீங்கும் ஏற்படாது எனக் கைதேர்ந்த வைத்தியர்களினுல் உறுதிப்படுத்தப்படவேண்டும். இவ்வாறு உறுதியான பின், ஒரு பெண் இவ்வில்லைகளைப் பாவித்து தனது ருதுவைப் பிற்படுத்தி, நோன்பைத் தொடராக நோற்கலாம். இன்ஷா அல்லாஹ் இறைவன் அதனை ஏற்றுக் கொள்வான்.

மொழிபெயப்பு: எம். எச். எம். தாஹா, நளீமி, பீ ஏ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9

## சிறுவரும் நோன்பும்

**கேள்வி:**

**சிறுவர், சிறுமியர் மீது எப்போது நோன்பு விதியாகின்றது? ஷரீஅத் ரீதியில் அவர்களுக்கு வரையறுக்கப்பட்ட வயதெல்லே உண்டா?**

பதில்;

நாயகம் (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறியிருக்கின்றனர்: "மூவகையானவர்களை விட்டும் எழுதுகோல் உயர்த்தப்பட்டு விட்டது; சிறுபிள்ளை பருவ வயதடையும் வரை; தூங்குபவன் விழித்தெழும் வரை; பைத்தியக்காரன் பைத்தியம் தெளியும் வரை." (அஹ்மத், அபூதாவூத், நஸாஇ)

எழுதுகோல் உயர்த்தப்பட்டுள்ளது என்பதன் பொருள், மார்க்கம் ஏவுகின்ற ஒரு செயலை நிறைவேற்ற வேண்டிய நிர்ப்பந்தம் இவர்களை விட்டும் நீங்கிவிட்டது என்பதாகும். எனினும், இஸ்லாம் மனித சுபாவத்தைக் கவனத்திற்கொள்கின்ற மார்க்கமாக இருப்பதால், சிறுபிராயத்திலிருந்தே இளஞ் சந்ததியினர் வணக்க வழிபாடுகளை மேற்கொள்வதை விரும்புகிறது. இதன் மூலம் வணக்க வழிபாடுகளில் ஆரம்பப் பயிற்சியை அவர்கள் பெற்றுக்கொள்கின்றனர்.

"உங்கள் பிள்ளைகளை ஏழு வயதில் தொழும்படி ஏவுங்கள்; பத்து வயதில் (தொழும்படி கூறி) அவர்களை அடியுங்கள்" என்று ஒரு நபி மொழி (அபூதாவூத், அஹ்மத்) கூறுகின்றது. நோன்பும் தொழுகை போன்று கடமையான ஒரு வணக்கமாகும் பிள்ளைகளை அதற்காகப் பயிற்றுவிப்பது வாஜிபாகும். ஆனல், எத்தனை வயதில் இருந்து இப்பயிற்சி வழங்கப்படவேண்டும் என்பது கேள்விக்குறியாகும். ஏழு வயதில் இருந்தே வழங்க வேண்டும் என்ற அவசியம் கிடையாது ஏனெனில், நோன்பு தொழுகையை விடச் சிரமமான செயலாகும். எனவே, நோன்பு நோற்குமாறு சிறு பிள்ளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குக் கட்டளையிடும் போது, அப்பிள்ளையின் உடற்பலத்தைக் கவனத்திற் கொள்ள வேண்டும் பெற்றோர் அல்லது பாது காவலர், பிள்ளை நோன்பு நோற்பதற்கான சக்தியைப் பெற்று விட்டதாக எப்போது கருதுகின்றாரோ, அப்போது ஒவ்வொரு ரமழான் மாதத்திலும், சில நாட்களுக்கேனும் அப்பிள்ளையை நோன்பு நோற்கப் பயிற்றுவிக்க வேண்டும். குறித்த ஒரு வருடத்தில் (ரமழானில்) மூன்று, அடுத்த ரமழானில் ஒரு வாரம், அதற்கடுத்த ரமழானில் இரு வாரங்கள், தொடர்ந்து வரும் வருடத்தில் மாதம் பூராவும் என்ற அடிப்படையில் இப்பயிற்சியை வழங்கலாம். எனவே, உரிய வயதை அடையும் போது சிரமமின்றி நோன்பு நோற்பதற்கான பயிற்சியை அப்பிள்ளை பெற்றுக்கொள்கிறது.

இளம் பிராயத்தில் இருந்தே இஸ்லாமிய ஒழுக்கப் பண்புகளையும், இஸ்லாமியக் கடமைகளையும் சிறுவர், சிறுமியர் கடைப்பிடித்தொழுகி, அவற்றைப் பழக்கப்படுத்திக் கொள்வதற்காக இஸ்லாம் வழங்கும் பயிற்சி நெறி இது தான்.

தொழுகை, நோன்பு போன்ற வணக்கங்களைப் பெற்றோர், பாதுகாவலர் தமது பிள்ளைகளுக்குப் பழக்கப்படுத்தி விட வேண்டும். ஏழு வயதில் கட்டளை மூலமும், பத்து வயதில் தண்டனை மூலமும் பிள்ளைகளுக்குத் தொழுகையைக் கற்பிக்க வேண்டும். பிள்ளை சக்தி பெறும் போது ஏழு வயதுக்கு ஒரு வருடமோ அல்லது சில வருடங்களோ பிந்திய நிலையிலாயினும் பெற்றோர் தனது பிள்ளைக்கு நோன்பு நோற்கும்படி ஏவ வேண்டும்.

**எச். ஐ. எம். கைருல் பஷர், நளீமி, B.A. (சிறப்பு) M.A. (சூடான்)**

---

# 10

---

## நோன்பாளியும் தொலைக்காட்சியும்

**கேள்வி:**

**ரமழான் மாதத்தில் நோன்பாளியாக இருக்கும் ஒருவர் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகளைப் பார்க்கலாமா? இது பற்றிய இஸ்லாமியத் தீர்ப்பு என்ன?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில்:

தொலைக்காட்சி (T V) ஒரு சாதனமாகும். அதில் நன்மையும் இருக்கலாம், தீமையும் இருக்கலாம். அனைத்துச் சாதனங்களுக்குமான தீர்ப்பு எப்போதும் நோக்கங்களைப் பொறுத்தே அமைவதுண்டு. டீவியும் வானொலி, பத்திரிகை போன்றதே. அவற்றில் நல்லவைகளும் இருக்கலாம், கெட்டவைகளும் இருக்கலாம். முஸ்லிமைப்பொறுத்தவரை-அவன் நோன்பாளியாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் - நல்லவற்றிலிருந்து பயன்பெறுவதும் தீயவற்றைவிட்டுத் தவிர்ந்து கொள்வதும் அவனது கடமையாகும். ஆனால், அவன் நோன்பாளியாக இருக்கும் நிலையில் மிக மிகப் பேணுதலாக இருக்க வேண்டும். அவனது நோன்பு பாழாகாமல் இருப்பதற்கும், கூலி வீணாகாமல் இருப்பதற்கும், அல்லாஹ்விடமிருந்து கிடைக்கக்கூடிய நன்மை பூரணமாகக் கிடைப்பதற்குமாக, குறிப்பாக நோன்பு காலத்தில் ஒரு முஸ்லிம் மிகவும் பேணுதலாக நடந்துகொள்ள வேண்டும்.

டீவி பார்ப்பதை மொத்தமாக ஹராம் என்றோ அல்லது மொத்தமாக ஹலால் என்றோ நான் கூறமாட்டேன். அது ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகளைப் பொறுத்ததாகும். நல்ல விடயங்களாக இருந்தால் அவற்றைப் பார்ப்பதும் கேட்பதும் கூடும். மார்க்க சம்பந்தமான நிகழ்ச்சிகள், செய்திகள், நன்மையின் பால் இட்டுச்செல்லக் கூடிய நிகழ்ச்சிகள் போன்றவற்றை இவற்றிற்கு உதாரணங்களாக்க் குறிப்பிடலாம். தீய நிகழ்ச்சிகளாக இருந்தால் (உதாரணமாக மட்டரகமான நடனங்கள்) அவற்றைப் பார்ப்பது எப்போதுமே ஹராமாகும். அதிலும் ரமழான் மாதத்தில் இவற்றைப் பார்ப்பதைக் கண்டிப்பாகத் தவிர்ந்துகொள்ள வேண்டும்.

மேலும், சில காட்சிகள் ஹராம் என்ற நிலையை அடையாவிட்டாலும் அவை மக்ரூஹ் என்ற நிலையில் இருக்கலாம். எந்தச் சாதனம் அல்லாஹ்வை ஞாபகப்படுத்துவதிலிருந்தும் தடுக்கின்றதோ அது ஹராம் ஆகும். அது டீவி பார்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதாக இருந்தாலும், வானொலி கேட்பதாக இருந்தாலும் அல்லது இதுபோன்ற எந்த வகையானதாக இருந்தாலும் சரிதான். அல்லாஹ்வால் கடமையாக்கப்பட்ட தொழுகை போன்ற வணக்கங்களைப் பராக்காக்குவதாக இருந்தால் அவை ஹறாமாகும்.

மதுபானம், சூதாட்டம் என்பவற்றைத் தடைசெய்வதற்கான காரணத்தை அல்லாஹ் கூறும்போது பின்வருமாறு தெளிவுபடுத்துகின்றான்; ''மதுபானத்தைக்கொண்டும் சூதாட்டத்தைக் கொண்டும் உங்களுக்கிடையில் விரோதத்தையும் குரோதத்தையும் உண்டுபண்ணவும், அல்லாஹ்வின் ஞாபகத்திலிருந்தும் தொழுகையிலிருந்தும் உங்களைத் தடுத்துவிடவுமே நிச்சயமாக ஷைத்தான் விரும்புகிறான். ஆகவே, அவற்றிலிருந்து நீங்கள் விலகிக்கொள்வீர்களா?''

டீ.வி நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பானவர்கள் எப்போதும், குறிப்பாக ரமழான் மாதத்தில், பொது மக்களுக்கு எத்தகைய நிகழ்ச்சிகளை முன்வைக்க வேண்டும் என்ற விடயத்தில் அல்லாஹ்வைப் பயந்து நடந்து கொள்ள வேண்டும். அப்புனித மாதத்தின் கௌரவத்தைப் பேணுவதற்காகவும், மக்கள் அல்லாஹ்வின் வழிபாட்டில் ஈடுபட்டு, நன்மைகளை அதிகமாகச் செய்வதற்குத் துணைபுரிவதற்காகவும் இவ்வாறு அவர்கள் நடந்துகொள்ள வேண்டும். இன்றேல் தமது பாவங்களையும் நிகழ்ச்சிகளைப் பார்ப்பவர்களின் பாவங்களையும் அவர்கள் சுமக்க நேரிடும். இத்தகையவர்களைப் பற்றித்தான் அல்லாஹ் பின்வருமாறு கூறியிருக்கிறான்:

''மறுமை நாளில் தங்கள் பாபச்சுமையை இவர்கள் பூரணமாகச் சுமப்பதுடன், அறிவின்றி இவர்கள் வழிகெடுத்த மற்றவர்களின் பாபச் சுமையையும் இவர்களே சுமப்பார்கள். இவர்கள் சுமப்பது மிகக்கெட்டதல்லவா?'' (16:2..)

மொழிபெயர்ப்பு: எம்.எம்.எம். அலி ஸப்ரி, நளீமி, பீ. ஏ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11

## நோன்பை விடுவதற்கான பிரயாண தூரம்

**கேள்வி:**

**ஒரு பிரயாணிக்கு நோன்பை விடுவதற்கு ஆகுமான பிரயாண தூரம் என்ன? உண்மையில் அது 81 கி. மீட்டரா? தனது பிரயாணத்தில் கஷ்டத்தை எதிர்நோக்காத நிலையில் நோன்பை விடுவது ஆகுமா?**

பதில்.

பிரயாணிக்கு நோன்பை விட முடியும் என்பதற்குப் பின்வரும் திருவசனம் ஆதாரமாகும்: ''உங்களில் நோயாளியாக அல்லது பிரயாணத்தில் இருக்கும் ஒருவர் (நோன்பை விட்டு) ஏனைய நாட்களில் (விட்ட நோன்பைக்) களாச் செய்ய வேண்டும்.''

பிரயாண தூரத்தை நிர்ணயிப்பதில் சட்ட நிபுணர்களுக்கு மத்தியிலே கருத்து வேறுபாடு நிலவுகிறது. எனினும், கேள்வி கேட்பவர் வினவுகின்ற 80 கி. மீட்டருக்கு மேற்பட்ட பிரயாண தூரத்தைப் பொறுத்தவரை அனைத்துச் சட்ட நிபுணர்களும் கருத்தொற்றுமைப்படுகின்றனர் என்றே நான் கருதுகின்றேன். பெரும்பாலான மத்ஹப்களில் தொழுகையைச் சுருக்குவதற்கும் நோன்பை விடுவதற்கும் நிர்ணயிக்கப்பட்ட பிரயாண தூரம் சுமார் 84 கி மீட்டராகும். இக் கணிப்பீடுகள் சுமாரானவையே. ஏனெனில், கி மீ. என்ற கணிப்பீடு நபி (ஸல்) அவர்களிடமிருந்தோ அல்லது ஸஹாபாக்களிடமிருந்தோ பெறப்பட்டதல்ல. ஆனால், இத் தூரம் போதுமானதே.

சில அறிஞர்கள், தொலைவை, அடிப்படையில் நிபந்தனையாகக் கருதுவதில்லை. ஏனெனில், மொழி ரீதியிலும், வழக்காற்றிலும் பிரயாணமாகக் கருதப்படும் எல்லாப் பிரயாணங்களிலும தொழுகையைச் சுருக்கி நிறைவேற்றுவது ஆகுமானதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறே பிரயாணிக்கு நோன்பை விடுவதும் ஆகுமானதா கும். (தொலை தூரம் என்ற நிபந்தனை தேவையில்லை.) குர்ஆனும் ஸுன்னாவும் இதையே அங்கீகரிக்கின்றன. பிரயாணம் மேற்கொள்ளும் நோன்பாளி இவ்விடயத்தில் தான் விரும்பியதைத் தெரிவு செய்துகொள்ள முடியும்.

நபி (ஸல்) அவர்களுடன் பிரயாணம் மேற்கொண்டிருந்த ஸஹாபாக்கள் சொன்னார்கள்: "நோன்பாளிகளும் நோன்பு நோற்காதவர்களும் எம்மோடு பிரயாணத்தில் ஈடுபட்டிருந்தனர். நோன்பை அனுஷ்டிக்காதோர் நோன்பு நோற்றிருந்தவர்களையோ, நோன்பு பிடித்திருந்தோர் நோன்பை விட்டிருந்தவர்களையோ குற்றம் பிடிக்கவில்லை." என்றாலும் பிரயாணத்தில் கடும் சிரமங்களுக்கு மத்தியில் நோன்பு நோற்பது மக்ரூஹ் ஆகும். சிலவேளை அது ஹராமாகவும் கருதப்படலாம்.

பிரயாணத்தின்போது நோன்பு நோற்றிருந்த ஒருவர் கடும் சிரமத்துக்குள்ளாகி மயக்கமுற்றிருந்த வேளையில், அவரைப் பற்றி நபிகளார் விசாரித்தனர். அப்போது அவர் நோன்பாளி எனக் கூறப்பட்டது. அதற்கு நபிகளார் "பிரயாணத்தில் நோன்பு பிடிப்பது உசிதமானதல்ல" எனக் கூறினார்கள் (புகாரீ). இது பிரயாணத்தில் கடும் சிரமத்துக்குள்ளானவருக்கு மட்டுமே உரியது. சிரமத்துக்குள்ளாகாத நிலையில் ஒருவர் நாம் ஏற்கனவே கூறியபடி இரண்டில் ஒன்றைத் தெரிவு செய்யும் சுதந்திரத்தைப் பெறுகிறார். விரும்பினால் நோன்பிருக்கலாம் அல்லது விட்டுவிடலாம். எனினும், எது சிறப்பானது?

இவ்விடயத்தில் உலமாக்கள் கருத்து வேற்றுமைப்படுகின்றனர். சிலர் நோன்பு நோற்பதைச் சிறப்பாகக் கருத, வேறு சிலர் நோன் ப விடுவதைச் சிறப்பாகக் கருதுகின்றனர். இது பற்றி உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) குறிப்பிடும்போது "இரண்டில் எது மிக இலகுவானதோ அதுவே சிறந்ததாகும்" எனக் கூறுகின்றார். சிலரைப் பொறுத்தவரை நோன்பாளிகளுடன் சேர்ந்து நோன்பு நோற்பது மிக இலகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானதாக இருக்கும். ஏனெனில் எல்லோரும் ரமழானுக்குப் பின் நோன்பை விட்டிருக்கும் நிலையில் தாம் மாத்திரம் ரமழானில் விட்ட நோன்பைக் 'களா'ச் செய்யாமல் இருக்க மேற்குறித்த வழியை அவர்கள் இலகுவானதாகக் கருதுவர். இத்தகைய ஒருவருக்கு நாம் சொல்வது, 'நீ நோன்பை அனுஷ்டி' என்பதாகும்.

வேறு சிலரோ பிரயாணத்தில் தமது முக்கிய தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு வசதியாக, ரமழானில் நோன்பை விட்டுவிட்டு, அல்லாஹ் தமக்கு அனுமதித்தபடி பின்னர் 'களா'ச் செய்வதுதான் இலகுவானது எனக் காண்பர். இத்தகைய ஒருவருக்கு நாம் கூறுவது 'நீ நோன்பை விட்டுவிட்டு ஏனைய நாட்களில் மீட்டு ('களா'ச் செய்)' என்பதாகும். எனவே, பிரயாணி எதை இலகுவாகக் காண்கிறானோ அதுவே மிகச் சிறந்ததாகும்.

ஹம்ஸா இப்னு ஆமிர் அல்-அஸ்லமி (ரலி) நபியவர்களைப் பார்த்து ''அல்லாஹ்வின் தூதரே, நான் ஒரு வாகனத்தில் (ஒட்டகம்) பிரயாணம் செய்கின்றவன். அதில் பிரயாணம் செய்வதோடு அதன் பராமரிப்பையும் கவனித்துக் கொள்கிறேன். நான் பலம் வாய்ந்த ஒரு வாலிபன். ரமழானை அடைந்துகொண்டால் நோன்பைப் பிற்படுத்தி, அதை அல்லாஹ்வுக்குச் செலுத்த வேண்டிய கடனாக ('களா' வாக) ஆக்குவதை விட ரமழானில் நோன்பிருப்பதையே இலகுவானதாகக் கருதுகிறேன். இந்நிலையில் நான் நோன்பு நோற்பது சிறந்ததா அல்லது விட்டுவிடவா?'' எனக் கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் ''ஹம்ஸாவே, இதில் நீர் விரும்பியதைச் செய்யும்'' என்றார்கள். இதன் கருத்து 'உனக்கு இலகுவானதைத் தெரிவு செய்து கொள்' என்பதாகும். (அபூதாவூத்)

மேற்குறித்த ஹதீஸை இமாம் நஸாஇ (ரஹ்) இவ்வாறு அறிவிக்கிறார்; ஹம்ஸா (ரலி) அல்லாஹ்வின் தூதரிடத்தில் ''பிரயாணத்தின் போது நோன்பிருப்பதற்கான சக்தி என்னிடமுண்டு. எனவே பிரயாணத்தில் நோன்பை விடுவது குற்றமா?'' எனக் கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் 'அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமக்கு அல்லாஹ் அளித்த சலுகை; அச் சலுகையைப் பயன் படுத்திக் கொள்வது சிறந்சதாகும். யார் நோன்பிருக்க விரும்புகிறாரோ அவர் மீது குற்றமில்லை'' எனப் பதிலளித்தார்கள்.

பிரயாணிகளுக்கு அல்லாஹ் விதித்துள்ள சட்டம் இது தான். பிரயாணத்தில் கஷ்டம் இருக்க வேண்டும் அல்லது கடும் சிரமம் ஏற்பட வேண்டும் என்பது இச்சலுகையைப் பயன்படுத்துவதற்கான நிபந்தனையன்று. பிரயாணம் என்ற நிபந்தனை மட்டுமே நோன்பை விடுவதற்குப் போதுமானது. இச்சலுகையை அல்லாஹ் சிரமம் என்ற காரணத்துக்காக வழங்கவில்லை. அதைப் பிரயாணம் என்ற காரணத்துக்காகவே கொடுத்துள்ளான். பிரயாணத்தின்போது நோன்பை விடுவதற்கு 'சிரமம்' என்பது நிபந்தனையாகக் கொள்ளப் பட்டிருந்தால், மக்கள் பெரும் கருத்து வேறுபாடுகளுக்கு ஆளாகியிருப்பர். பிடிவாதமுள்ளோர் கடும் சிரமங்களை அனுபவித்துக்கொண்டே 'இது சிரமமல்ல' எனக் கூறி தமது உள்ளத்தை வருத்திக் கொள்வர். தனது அடியான் வேண்டும் என்றே தன்னை வருத்திக்கொள்வதை அல்லாஹ் ஒருபோதும் விரும்பமாட்டான். அவ்வாறே சலுகை பெற விரும்பும் ஒருவர் அற்ப சிரமத்தையும் தனக்குப் பாரிய சிரமமாகக் கருதிக் கொள்வார்.

எனவே, நோன்பை விடுவகற்கான தீர்ப்பை அல்லாஹ் 'பிரயாணம்' என்ற நிபந்தனையோடு மட்டுமே தொடர்பு படுத்தியுள்ளான். ஒருவன் விமானத்திலோ புகையிரதத்திலோ அல்லது காரிலோ பிரயாணம் செய்தாலும் அவனுக்கு நோன்பை விட முடியும். இங்கே தெளிவு பெற வேண்டிய விடயம் யாதெனில், இவ்வாறு செல்பவன் ஏனைய நாட்களில் பிரயாணத்தின்போது விடுபட்ட நோன்பைக் 'களா'ச் செய்ய வேண்டும் என்பதாகும். பிரயாணம் காரணமாகத் தவறிப் போன நோன்பு ஈடுசெய்யப்பட வேண்டும். ஏனெனில் அது மற்றொரு தவணைக்காகப் பிற்படுத்தப்பட்டதாகும். பிரயாணம் ஒருவனுக்கு எத்தகைய சிரமத்தையும் தராதிருந்தாலும் நோன்பாளி நோன்பை விடவோ தொடரவோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரம் பெற்றவனுவான்; அது அவனுடைய தெரிவைப் பொறுத்ததாகும்.

பிரயாண அனுபவம் பெற்றவன், பிரயாணமானது விமானத்தில் சென்றாலும் சரி, மிருகத்தின் மீது சவாரி செய்தாலும் சரி அது துன்பம் தருவது என்பதை நன்கு அறிவான். தான் வாழும் இடத்தையும், பழகிய உறவினர்களையும் விட்டுத் தூரமாகிச் செல்லும் ஒருவன், இயல்புக்கு மாற்றமான, அமைதியற்ற சில உணர்வுகளுக்கு உள்ளாகின்றான். உடற்கூற்று, பெளதிக காரணிகளுக்கு அப்பால், இத்தகைய மானசீகக் காரணிகளுக்காகவும், இவையல்லாத நாம் அறிந்த, அறியாத வேறு காரணிகளுக்காகவும் அல்லாஹ் பிரயாணத்தின் போது நோன்பை விடுவதை ஆகுமாக்கியுள்ளான். இவ்விடயத்தில் அல்-குர்ஆனின் போதனை எமக்குப் போதுமானது. தத்துவம் பேசி, அல்லாஹ் தனது அடியார்களுக்கு வழங்கிய சலுகையைப் பாழாக்க வேண்டியதில்லை.

''அல்லாஹ் உங்களுக்கு இலேசையே விரும்புகிறான்; அவன் உங்களுக்குக் கஷ்டத்தை விரும்பமாட்டான்.

(அல்-குர்ஆன்)

மொழிபெயர்ப்பு: எச். ஐ. எம். கைருல் பஷர்
(நளீமி, பீ. ஏ. (சிறப்பு), எம். ஏ. சூடான்)

# 12

## பணத்தில் ஸகாத்தின் அளவைக் கணிக்கும் முறை

**கேள்வி:**

**பணத்தில் ஸகாத்தைக் கணிக்கும் போது அதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட வேண்டியது தங்கமா? அல்லது வெள்ளியா?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில்:

இன்று நாம் ஸகாத்தைக் கணிக்கும் போது தங்கத்தைத் தான் அளவீடாகக் கொள்ள வேண்டும். வெள்ளியை அல்ல. ஸகாத்தைக் கணிக்கும் போது நாயகம் (ஸல்) அவர்கள் தங்கத்தையும் வெள்ளியையும் கவனத்துக்கு எடுத்தது வித்தியாசமான இரு அளவுகளைச் சுட்டிக்காட்டுவதற்காக அல்ல, இரு வகையான நாணயங்கள் மூலமும் தீர்மானிக்கப் பட்ட அளவு ஒன்றாகவே இருந்தது. ஷரீஅத்தின் பார்வையில் நிஸாப் என்பதன் கருத்து, செல்வ நிலையை எடுத்துக் காட்டும் அதி தாழ்ந்த எல்லை என்பதாகும்.

செல்வந்தர்கள் ஏழைகளுக்கு வழங்கும் ஒரு செயலே இஸ்லாத்தில் ஸகாத் எனக் கொள்ளப்படுகிறது. அவ்வாறாயின் யார் அந்தச் செல்வந்தர்? அல்லது ஒருவரை நாம் எப்போது செல்வந்தர் என்று அழைக்கலாம்?

ஷரீஆ செல்வத்துக்கான ஓர் அடையாளத்தைக் காட்டித் தந்திருக்கிறது. அதுதான் நிஸாபை அடைந்திருத்தல். நிஸாப் என்பது ஸகாத் வாஜிபாவதற்கு ஒருவரிடம் இருக்க வேண்டிய செல்வத்தின் ஆகக் குறைந்த அளவாகும். பரிமாற்றத்திலுள்ள பணத்தின் பெறுமதி வேறுபாட்டுக்கு ஏற்ப நிஸாபும் வேறுபடும். அது தங்கமாக இருந்தால் இருபது களஞ்சி என்றும், வெள்ளியாக இருந்தால் இருநூறு திர்ஹம்கள் என்றும் வேறுபடும்.

நாயகம் (ஸல்) அவர்கள் தங்கத்தில் ஓர் அளவையும் வெள்ளியில் இன்னோர் அளவையும் ஏன் தீர்மானித்தார்கள்? ஏனெனில், நபிகளாரின் காலத்தில், பாரசீகத்தில் இருந்து வந்த திர்ஹம்களும் ரோமில் இருந்து வந்த தங்க நாணயங்களுமாக (தினார்கள்) அரபிகளிடம் இரு வகையான நாணயங்கள் புழக்கத்தில் இருந்து வந்தன. அரபிகள் தமக்கெனத் தனியானதொரு நாணயத்தை அச்சிடவில்லை.

எனவே, நபிகளார் (ஸல்) அவர்கள் செல்வத்தில் ஸகாத்தின் அளவை மதிப்பிட்டபோது தங்கமாக இருந்தால் இருபது தினார் என்றும் வெள்ளியாக இருந்தால் இருநூறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திர்ஹங்கள் என்றும் தீர்மானித்தார்கள். அக்காலத்தில் ஒரு தினார் பத்து திர்ஹங்களுக்குச் சமமாக இருந்தது. அதன் பிறகு வெள்ளியின் பெறுமதி படிப்படியாகக் குறையத் துவங்கியது. குலபாஉர் ராஷிதீன்களின் காலத்தில் 12 திர்ஹங்களுக்குச் சமமாகவும், அதன் பிறகு 15 ஆகவும், பின்னர் 20, 30 திர்ஹங்களாகவும் குறைந்தது. இன்று தங்கத்துடன் ஒப்பிடும் போது வெள்ளி மிகவும் குறைந்த பெறுமதியுடையதாக மாறிவிட்டது எனவே, தங்கத்திலும் வெள்ளியிலும் ஸகாத் வாஜிபாவதற்கு இருக்க வேண்டிய அளவுகளில் பெரிய ஏற்றத் தாழ்வுகள் ஏற்பட்டன. இதனால் வெள்ளியை அடிப்படையாக வைத்து செல்வத்தின் குறைந்த எல்லையைக் கணிக்கும் போது 50 ஸவூதி/ கத்தர் ரியால்களாகவும், தங்கத்தை அடிப்படையாக வைத்துக் கணிக்கும் போது 1500 அல்லது அதற்கு மேற்பட்ட ரியால்களாகவும் இருப்பது ஏற்றுக்கொள்ளப்பட முடியாத முடிவுகளாகும்.

வெள்ளியை அடிப்படையாக வைத்து பணத்தின் நிஸாபைக் கணித்தால் அது 50 ரியால்களை விட அதிகம் இருக்காது. தங்கத்தை வைத்துக் கணித்தால் இரண்டுக்கும் இடையிலான வேறுபாடு மிக அதிகமானதாக இருக்கும். ஏனெனில், 20 தங்க நாணயங்கள் 85 கிராம் நிறையுடையது. முதன் முதலில் அப்துல் மலீக் இப்னு மர்வானின் காலத்தில் தான் இஸ்லாமிய தினார் அச்சிடப்பட்டது. அதன் பிறகே அந்த தினார் பரவலாகப் பரிமாற்றத்துக்கு வந்தது. பல நூதன சாலைகளில் காணப்படும் நடுத்தர அளவான தினாரின் நிறை 4. 4. கிராம்களாகும். எனவே, 20 தினார் 85 கிராம்களாகின்றன. இதன் அடிப்படையில், பணத்தின் நிஸாபைக் காண வேண்டுமானால், 85 கிராம் தங்கம் எவ்வளவு தொகைப் பணத்துக்குச் சமமாகிறது என்பதைக் கண்டறிய வேண்டும். அதுவே ஷரீஅத்தின் நிஸாபாக அல்லது ஸக்காத் வாஜிபாவதற்குரிய செல்வத்தின் ஆகக் குறைந்த அளவாக இருக்கும்.

வெள்ளியைப் பொறுத்தவரை அதன் நிஸாப் தொகை குறைவாக இருப்பதால் அதனை நாம் கருத்திற்கொள்ள வேண்டியதில்லை. ஏனெனில், 50 ரியால்களை வைத்திருப்பவனை நாம் செல்வந்தனாகக் கருதுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில், தங்கத்தை நிஸாபாக ஏற்றுக்கொள்வதே மிகவும் பொருத்தமானது. ஷரீஆ விதிக்கும் ஏனைய பொருட்களின் நிஸாபுடனும் இது பொருந்தக் கூடியதாக இருக்கிறது. அதாவது ஐந்து ஒட்டகங்கள் அல்லது 40 ஆடுகள் அல்லது 30 மாடுகள் போன்றவற்றுடன் ஒத்துவரக் கூடியதாக அமைகின்றது.

சுருக்கமாகச் சொல்வதானால், ஒருவருக்கு ஸகாத் வாஜிபா இல்லையா என்பதைக் கண்டறிய அவரிடம் 85 கிராம் தங்கத்துக்குச் சமமான அளவு பணம் இருக்கிறதா, இல்லையா என்பதைப் பார்க்க வேண்டும். அந்தக் குறிப்பிட்ட அளவு பணம் இருக்குமானால், அதில் 2.5 வீதத்தை அவர் ஸகாத்தாக் கொடுக்க வேண்டும்.

மொழிபெயர்ப்பு: எம். இஸட். எம். நஜ்மான், நளீமி, பீ. ஏ.

---

# 13

---

## விற்பனைக்காக வாங்கப்பட்ட நிலத்துக்குரிய ஸகாத்

கேள்வி:

என்னிடம் நீண்ட காலத்துக்கு முன்பு வாங்கப்பட்ட பல நிலங்கள் உண்டு. அவற்றுக்கான ஸகாத் பற்றிய சட்டத்தை அறிய விரும்புகிறேன். அவற்றுக்கு ஸகாத் கொடுக்க வேண்டுமாயின், அவற்றை வாங்கிய பணப்பெறுமதிக்கு ஸகாத் கொடுக்க வேண்டுமா அல்லது வருடந்தோறும் அவற்றின் பெறுமதியைக் கணித்து ஸகாத் கொடுக்க வேண்டுமா? ஒவ்வொரு வருடமும் அவற்றின் பெறுமதியைக் கணிப்பதில் பல சிரமங்கள் இருக்கின்றன.

பதில்:

வாங்கப்படும் நிலம் இருவகைப்படும். ஒன்று இலாப நோக்கில், விற்பனை செய்வதற்காக வாங்கப்படுவது. இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவகை வியாபாரமாகும். இந்நிலையில் நிலம் ஒரு வியாபாரப் பொருளைப் போன்றே கணிக்கப்படும். எனவே, ஒவ்வொரு வருடமும் அதனுடைய பெறுமதியை மதிப்பிட்டு, மொத்தப் பெறுமதியில் 2.5 வீதத்தை ஸகாத்தாகக் கொடுத்துவிட வேண்டும். அதாவது ஒவ்வொரு 1000க்கும் 25ஐக் கொடுக்க வேண்டும்.

விற்பனைக்காக வாங்கப்படும் நிலத்தைப் பொறுத்த வரை பெரும்பாலான சட்டநிபுணர்களின் (புகஹாக்கள்) கருத்து இதுவே. ஆனால், மாலிக் மத்ஹபின் படி குறிப்பிட்ட நிலத்தை விற்கின்ற போது பெறப்படும் பணப்பெறுமதிக்கே 2.5 வீதத்தை ஸகாத்தாகக் கொடுக்க வேண்டும். என்றாலும், அதிகமான புகஹாக்களின் கருத்துப்படி அந் நிலம் ஒரு வியாபாரப் பொருளாக இருப்பதனால் அதற்கு ஒவ்வொரு வருடமும் ஸகாத் கொடுக்க வேண்டும். இதுவே மிகச்சரியான கருத்தாகும்.

சில சந்தர்ப்பங்களில், உ-மாக விலைவீழ்ச்சி ஏற்படும் போது இமாம் மாலிக்கின் கருத்தை நாம் பின்பற்ற முடியும். அதாவது, ஒருவன் ஒரு நிலத்தைக் குறிப்பிட்டதொரு விலைக்கு வாங்கினான். பின்பு அதன் பெறுமதி குறைந்து விட்டது. அப்போது அவன் அதனை விற்பதாயின், குறைந்த விலைக்கே விற்க முடியும். இதுபோன்ற சந்தர்ப்பத்தில் மாலிக் மத்ஹபின் படி தீர்ப்புச் சொல்லலாம். ஆனால், 10,000க்கு வாங்கிய நிலத்தை, இன்று நடைமுறையில் இருப்பது போல், ஒருவருடத்தின் பின்பு 50,000க்கோ அல்லது அதைவிடக் கூடுதலான விலைக்கோ விற்பதாயின், ஏனைய வியாபாரங்கள் போன்று இதுவும் ஓர் இலாபகரமான வியாபாரமாகவே கணிக்கப்படும். இந்நிலையில் நிலச் சொந்தக்காரன் கைதேர்ந்த அனுபவசாலிகளின் மூலம் வருடா வருடம் அதன் பெறுமதியைக் கணித்து மொத்தப் பெறுமதிக்குரிய ஸகாத்தைக் கொடுத்துவிட வேண்டும்.

நிலத்தை விற்பனைக்காக அல்லாமல் கட்டடம் கட்டுவதற்காக வாங்கியிருந்தால் அதற்கு ஸகாத் கொடுக்க வேண்டியதில்லை. அந்நிலத்தில் கட்டடங்கள் கட்டி அவற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைக் கூலிக்குக் கொடுப்பதாக இருந்தால் அச் சொத்து களில் இருந்து பெறப்படும் வருமானத்துக்கு ஸகாத் கொடுப்பது கடமையாகும்.

மொழிபெயர்ப்பு: ஸீ. ஐயூப் அலீ, நளீமி பீ. ஏ. (சிறப்பு) எம். ஏ. (சூடான்)

# 14

## வசதியுடைய சகோதரர்களுக்கு ஸகாத் கொடுத்தல்

**கேள்வி:**

**மனைவிக்கும், செலவு கொடுப்பது தன்மீது கடமையானவர் களுக்கும், வசதியுள்ள சகோதரர்களுக்கும் ஸகாத் கொடுக்க லாமா?**

பதில்:

*மனைவி, கணவனின் ஒரு பகுதியாக இருப்பதால் அவளுக்கு கணவன் தனது செல்வத்திலிருந்து ஸகாத் கொடுக்க முடியாது என்பது ஏகோபித்த கருத்தாகும். "(நீங்கள் சேர்ந்து வாழக்கூடிய உங்கள்) மனைவிகளை, நீங் கள் அவர்களிடம் மனநிம்மதி பெறுவதற்காக உங்களில் இருந்தே அவன் படைத்திருப்பது அவனுடைய அத்தாட்சி களில் உள்ளதாகும்." (குர்ஆன் 30 : 21)*

*அவன் குடும்பம் நடாத்தும் வீடு அவளுடையதாகும். இதனை அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்: 'நீங்கள் (உங்க ளது மனைவியர்களாகிய) பெண்களைத் தலாக் கூற விரும்பினால் அவர்களுடைய 'இத்தா'வின் ஆரம்பத்தில் கூறி, இத்தா வைக் கணக்கிட்டு வாருங்கள். (இந்த விடயத்தில்) உங்கள் இறைவனாகிய அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள். (நீங் கள் தலாக் கூறிய) பெண்கள் பகிரங்கமாக யாதொரு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானக் கேடான காரியத்தைச் செய்தாலன்றி, அவர்களை அவர்களது வீட்டிலிருந்து (இத்தாவுடைய காலம் முடிவு பெறுவதற்கு முன்னர்) வெளியேற்றிவிட வேண்டாம்,'' (25:1)

அவர்களது வீடு என்பதன் கருத்து அவர்கள் குடியிருந்து குடும்பம் நடாத்தும் வீடு என்பதாகும். அது மனைவியின் வீடுமாகும். கணவனின் சொத்து மனைவியின் சொத்துப் போன்றதே. எனவே, அவனுக்கு அவன் ஸகாத் கொடுத்தால், உண்மையில் அவன் தனக்குத்தானே ஸகாத் கொடுத்துக் கொள்வதாகவே அமையும். ஒருவன் தனக்குத்தானே ஸகாத் கொடுத்துக் கொள்ள முடியாது என்பதனால், இஸ்லாமிய அறிஞர்கள், கணவன் தனது ஸகாத் பணத்திலிருந்து ஒருபோதும் தனது மனைவிக்குக் கொடுக்க முடியாது என்ற விடயத்தில் ஏகோபித்த கருத்துக்கொண்டுள்ளார்கள். இவ்வாறே அவனது பிள்ளைகளும் அவனில் ஒரு பகுதியாகையால் அவர்களுக்கும் ஸகாத் கொடுக்க முடியாது. ''உங்கள் பிள்ளைகள் உங்கள் உழைப்பால் வந்தவர்கள்'' என ஹதீஸ் குறிப்பிடுகிறது. அவனது பெற்றோர்களது நிலைமையும் அத்தகையதே. அவர்களில் ஒரு பகுதியாகவே அவன் காணப்படுகின்றான்.

ஆனால், இமாம் இப்னு தைமியாவின் கருத்துப்படி பெற்றோர் வறியவர்களாகவும், அவர்களுக்குச் செலவுசெய்ய மகனால் முடியாமலும் இருந்தால் தனது ஸகாத் பணத்தைப் பெற்றோருக்குக் கொடுக்கலாம். இக்கருத்திலும் தவறில்லை. சகோதரர்களைப் பொறுத்தவரை அவர்கள் வறியவர்களாயின் அவர்களுக்குச் செலவு கொடுப்பது அவன் மீது கடமையாகும். எனவே, அவர்களுக்கு ஸகாத் கொடுக்க முடியுமா, முடியாதா என்ற விடயத்தில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு நிலவுகிறது. பொது விதியின் படி ஒருவன் தனது வறிய சகோதரர்களுக்குத் தனது ஸகாத்தை வழங்க முடியுமென்ற கருத்தை நான் மிகச் சரியானதாகக் கருதுகின்றேன். மனைவி, பிள்ளைகள், பெற்றோர் முதலானோரை அப்பொது விதியிலிருந்து நீக்கினாலும், சகோதரர்கள் அவ்விதிக்கு உட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டவர்களாகவே இருப்பர். சாச்சி, மாமி, மாமி மகள், சாச்சியின் மகள் போன்ற ஏனைய உறவினர்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு ஸகாத் கொடுப்பதில் தவறில்லை என்பது ஏகோபித்த கருத்தாகும்.

வசதி படைத்த சகோதரர்களாயின் அவர்களுக்கு ஸகாத் கொடுக்கவே முடியாது. சகோதரராயினும், அல்லா விட்டாலும் வசதியிருப்பின் ஸகாத் கொடுக்க முடியாது. ''வசதியுடையவர்களும் உடல் ஊனமற்ற பலம் வாய்ந்தவர்களும் ஸகாத் பெறுவது கூடாது'' என நபிகளார் குறிப்பிட்டார்கள். மேலும், அது செல்வந்தர்களிடமிருந்து பெறப்பட்டு வறியவர்களுக்குக் கொடுக்கப்படும் என்றார்கள். எனவே, வசதிபடைத்தவர்களுக்கு ஸகாத் கொடுப்பது அது விதியாக்கப்பட்டதன் அடிப்படை நோக்கத்துக்கே முரண் பட்டதாகும்.

மொழிபெயர்ப்பு: ஸீ. ஐயூப் அலி, நளீமி, பீ. ஏ. (சிறப்பு)
எம். ஏ. (சூடான்)

---

# 15

---

## கால்நடையாகச் சென்று ஹஜ்ஜை நிறைவேற்றுதல்

கேள்வி: ஹஜ்ஜுக்காக விமானத்தில் அல்லது வாகனத்தில் செல்வதை விடக் கால் நடையாகச் செல்வது சிறந்தது என்ற கருத்துச் சரியானதா? பாகிஸ்தான் போன்ற நாடுகளிலிருந்து வரும் சிலர் கால்நடையாகச் சென்று ஹஜ்ஜை நிறைவேற்றுவது அதிக நன்மையளிக்கக்கூடியது என்று கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியுமா?

பதில்: வணக்க வழிபாடுகளைப் பொறுத்தவரையில், வெறும் கஷ்டத்தை மாத்திரம் கருத்திற் கொண்டு அதிக கூலி வழங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்படுவதில்லை; மாறாக, பல அடிப்படைகளையும் எண்ணற்ற நிபந்தனைகளையும் ஆதாரமாகக் கொண்டே கூலி நிர்ணயிக்கப்படுகின்றது. இந்த வகையில், மிகவும் முக்கியமானதாக ''இக்லாஸ்'' எனும் உளத்தூய்மை அமைந்திருக்கின்றது. உளத் தூய்மை இருக்கும் போதுதான் வணக்க வழிபாட்டின் அடிப்படை அம்சங்களைப் பேணி, அழகான முறையில் அதனை நிறைவேற்ற முடியும். அதனோடு ஸுன்னத்தான அம்சங்களும் உடன் சேரும் போது அதிக பயனளிக்கக்கூடிய உயர் வழிபாடாகவும் மாறிவிடும். குறிப்பிட்ட செயலை நிறைவேற்றுவதில் அனுபவித்த சிரமங்களும் கஷ்டங்களும் இவற்றின் பிறகுதான் கருத்திற்கொள்ளப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

இறைவனால் விதியாக்கப்பட்ட மார்க்க அனுஷ்டானங்களை நிறைவேற்றுவதில் அதிக கஷ்டங்களை அனுபவிக்கும் ஒருவனுடைய பிரயத்தனங்களையும் முயற்சிகளையும் அல்லாஹ் ஒரு போதும் கூலி வழங்காமல் புறக்கணிக்கமாட்டான். இருப்பினும், அவன் தனது சக்திக்கு மீறி, தன்னைக் கஷ்டப்படுத்திக் கொள்ளக்கூடாது என்பது முக்கியமான ஒரு நிபந்தனையாகும்.

உதாரணமாக, ஒருவனுடைய வீடு பள்ளிக்கு மிக அருகில் இருக்கின்றது என வைத்துக்கொள்வோம். அதிக நன்மைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் தனது காலெட்டுக்களை அதிகரித்துக் கொள்வதற்காக, அவன் சுற்றி வளைத்துப் பள்ளிக்குச் செல்கின்றான் என்றால், அவனது நடத்தையை நியாயப்படுத்த முடியுமா? உண்மையில் பள்ளி, வீட்டிலிருந்து தொலைவாக அமைந்திருப்பின் ஒவ்வோர் எட்டுக்கும் நன்மையுண்டு என்ற இஸ்லாத்தின் கருத்து இதற்கு ஆதாரமாக அமைய முடியுமா? இது பாமரத் தன்மையான சிந்தனையாகும் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் பனூஸலமா கோத்திரத்தின் வசிப்பிடம் பள்ளியிலிருந்து மிகத் தொலைவில், நகர எல்லையில் அமைந்திருந்தது. அவர்கள் தமது குடியிருப்பைப் பள்ளிக்கு நெருங்கியதாக மாற்றிக் கொள்வதற்கு நபி (ஸல்) அவர்களிடம் அனுமதி கேட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது அவர்கள் மறுத்துவிட்டார்கள். நகர எல்லைப்புறத்திலேயே அவர்களை வசிக்குமாறு கூறிய நாயகம் (ஸல்) அவர்கள், தொழுகைக்காக அவர்கள் நடந்து வருகின்ற ஒவ்வோர் எட்டுக்கும் ஒரு நன்மை எழுதப்படுகின்றது என்றும், அல்லாஹ்விடத்தில் இருக்கின்ற பதிவேட்டில் அவை பதியப்படுகின்றன என்றும் நன்மாராயம் கூறினார்கள். ஆனால், இதன் பொருள் ஒவ்வொரு மனிதனும் அதிக நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்காக நீண்ட தூரம் நடந்து வரவேண்டும் என்பதல்ல என்பதையும் நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

விமானப் பிரயாணத்துக்குரிய வசதியற்ற ஒருவன், கப்பலிலோ அல்லது குறைந்த கட்டணத்தையுடைய வேறு வாகனங்களிலோ அல்லது கால் நடையாகவோ ஹஜ்ஜுக்கு வந்தால் எவ்விதக் கஷ்டமோ சிரமமோ இன்றி இரண்டு மணித்தியாலங்களில் அல்லது அதைவிடக் குறைவான நேரத்தில் ஹஜ்ஜுக்கு வந்த ஒருவன் பெறுகின்ற நற்கூலியைவிட அதிக நற்கூலியைப் பெற்றுக்கொள்வான் என்பதில் எவ்விதச் சந்தேகமுமில்லை. ஒரு கடமையை நிறைவேற்றுவதற்காகத் தன்னை அளவுக்கு மீறிக் கஷ்டப்படுத்திக் கொள்ளக் கூடாது என்பது தான் நாம் புரிந்துகொள்ளவேண்டிய மிக முக்கிய உண்மையாகும்.

சுருங்கக் கூறின், சொகுசு வாகனத்தில் செல்ல முடியுமான நேரத்தில் சொகுசற்ற வாகனத்தில் செல்வது அல்லது வாகனம் இருக்கும் போது கால்நடையாகச் செல்வது போன்றன தன்னைத்தானே கஷ்டப்படுத்திக் கொள்வதற்கான உதாரணங்களாகும். இவற்றை இஸ்லாமிய ஷரீஆ ஒரு போதும் அங்கீகரிக்காது. தன்னைத்தானே வருத்தி ஏற்படுத்திக் கொள்ளும் கஷ்டத்தை இஸ்லாம் கருத்திற்கொள்ளாவிட்டாலும், கடமையை நிறைவேற்றும் போது ஏற்படும் கஷ்டங்களுக்குக் கூலி வழங்கத் தவறமாட்டாது என்பது கவனிக்கத்தக்கது.

மொழிபெயர்ப்பு: எம். நவாஸ் ஸஹ்ராதீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16

## ஹஜ்ஜாஜியும் பாவச் செயல்களில் ஈடுபடுதலும்

**கேள்வி:** 14 வயதுடைய ஒருவரது ஹஜ் ஏற்றுக்கொள்ளப்படுமா? ஹஜ் செய்த பின்னர் ஏதேனும் பாவமான கருமங்களில் ஈடுபட்டால் அவரது ஹஜ் செல்லுபடியற்றதாக மாறிவிடுமா? இதனால் அவர் மீண்டும் ஹஜ் செய்ய வேண்டிய கடமைக்குள்ளாகி விடுவாரா?

**பதில்:-** 14 வயதுடைய ஒருவர் பருவமடையாத நிலையில் ஹஜ் செய்வாராயின், அவரது ஹஜ் இஸ்லாம் கடமையாக்கிய ஹஜ்ஜாக அமையாது. ஏனெனில், இஸ்லாம் விதித்துள்ள கடமை நிறைவேறுவதற்குப் பருவமடைந்திருக்க வேண்டும் என்பது முக்கிய நிபந்தனையாகும்.

பருவமடைதல் என்பது இருவகையாக அமைய முடியும்.

1. வயதின் மூலம் பருவமடைதல்: இது 15 வயதை அடைவதைக் குறிக்கும்.
2. ஸ்கலித மூலம் பருவமடைதல்.

இந்த இரண்டில் ஒரு முறையிலாவது பருவமடையாத நிலையில் செய்யப்படும் ஹஜ் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அமைய முடியாது. எனவே, அதனை மீண்டும் திருப்பிச் செய்வது அவசியமாகும்.

ஹஜ் செய்ததன் பின்னர் பாவம் செய்வது ஹஜ்ஜை முறித்துவிடாது. பாவங்களின் காரணமாக நன்மைகளில் குறைவையும், விளைவுகளில் நிறைவற்ற தன்மையையும் ஏற்படுத்தினாலும் கூட, நன்மைகளைத் தீமைகள் நீக்கிவிடாது என்பதனால், ஹஜ் செய்ததன் பிறகு ஒருவர் செய்யும் பாவங்கள் அவரது ஹஜ்ஜை முறித்துவிடாது. நிச்சயமாக அல்லாஹ் மறுமை நாளில் ஒவ்வொரு மனிதனதும் சிறு, பெரும் பாவங்களைப் பற்றி விசாரிப்பான். நன்மையும் தீமையும் தராசில் நிறுக்கப்பட்டு, நன்மைகள் அதிகமாக இருந்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் சுவன வாசியாகவும் இன்றேல் நரக வாசியாகவும் கணிக்கப்படுவான். இந்த வகையிலேயே தண்டனையும் கூலியும் வழங்கப்படும். அல்குர்ஆன் இப்படிக் கூறுகின்றது: "மறுமை நாளில் நாம் நியாயமான, சரியான தராசையே வைப்போம். எந்தவொரு ஆத்மாவுக்கும் அநியாயம் இழைக்கப்படமாட்டாது. ஒரு கடுகின் அளவினதாக இருப்பினும் அதனையும் அந்நாளில் நிறுப்பதற்காகக் கொண்டு வருவோம். கணக்கெடுப்பதற்கு நாமே போதுமானவர்கள்." (21:48)

"யார் ஒரு கடுகளவுப் பிரமாணம் நன்மை செய்திருப்பாரோ அவர் அதனை அங்கு கண்டுகொள்வார். யார் ஒரு கடுகளவுப் பிரமாணம் தீமை செய்திருப்பாரோ அதனையும் அவர் கண்டு கொள்வார்." (99: 7, 8)

ஒரு முஸ்லிமின் ஹஜ் வணக்கம் மிகச் சிறந்ததாகவும், நன்மைபயக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும் என இஸ்லாம் விரும்புகிறது. ஹஜ்ஜின் பிறகு அவனிலும், அவனது வாழ்விலும் அதன் இலட்சணங்கள் வெளிப்பட வேண்டுமெனவும், அவன் இறைவனிடத்தில் பச்சாதாபப்பட்டு, பாவமன்னிப்புத் தேடி, நற்கிரியைகள் புரிந்து, புதியதொரு வாழ்வை ஆரம்பிக்க வேண்டுமென்றும் இஸ்லாம் எதிர்பார்க்கின்றது. இதற்கு முன்னர் பாவங்கள் செய்து, அக்கிரமங்கள் புரிந்து இதயங்களைக் கறைப்படுத்திக் கொண்டவர்கள் ஹஜ்ஜின் மூலம் புத்துணர்வும் புதுத் தெம்பும் பெற்று, பிரகாசமான இதயத்தோடும் இறைசிந்தனையோடும் வாழ வேண்டுமென்பது இஸ்லாத்தின் கருத்தாகும். 'ஒருவனுடைய' ஹஜ் இது போன்ற மானுஷிகப் பண்புகளைத் தரக்கூடியதாக அமையுமாயின், அதுதான் பயன்மிக்கதாகவும், சுவனத்தைப் பெற்றுத்தரக் கூடியதாகவும் இருக்க முடியும்.

சுருங்கக் கூறின், மேற்சொன்ன விளுவுக்குரியவர் குறிப்பிட்ட இருவழிகளில் ஏதேனும் ஒன்றின் மூலம் பருவமடையாதிருப்பின், அவர் மீண்டும் ஒருமுறை ஹஜ் செய்யவேண்டும். பாவங்கள் ஹஜ்ஜை முறிக்காவிட்டாலும், அதன் பூரண பயன்களைப் பெற்றுக்கொள்வதற்கு அவற்றை விட்டும் தவிர்ந்திருப்பது இன்றியமையாததாகும்.

மொழிபெயர்ப்பு: எம். நஜாஸ் ஸஹூர்தீன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17

## உள்ஹிய்யா

**கேள்வி:** உள்ஹிய்யா எப்போது நிறைவேற்றப்பட வேண்டும்? உள்ஹிய்யாக் கொடுப்பதற்கு எத்தகைய மிருகங்களைப் பயன் படுத்த முடியும்?

**பதில்:** உள்ஹிய்யா என்பது மிக முக்கிய ஸுன்னத்தான அமல்களில் ஒன்றாகும். நபி (ஸல்) தனக்காகவும், தன் குடும்பத்துக்காகவும் ஆடுகளை அறுத்துப் பகிர்ந்தளித்தார்கள். இமாம் அபூஹனீபா, "வசதி படைத்தவர்கள் உள்ஹிய்யாக் கொடுப்பது கட்டாயக் கடமையாகும்!" எனக் குறிப்பிடுகிறார். ஏனெனில், "எவர் வசதியிருந்தும் உள்ஹிய்யாக் கொடுக்கவில்லையோ அவர், நாங்கள் தொழுமிடத்தை நெருங்க வேண்டாம்" என நபி (ஸல்) குறிப்பிட்டுள்ளார்கள். எனவே, வசதியுள்ளவர்கள் மிக முக்கியமான ஸுன்னத்துக்களில் ஒன்றான இந்த உள்ஹிய்யாவைக் கட்டாயம் நிறைவேற்ற வேண்டும். அதன் மூலம் அளப்பரிய நன்மைகளைப்பெற முடியும்.

உள்ஹிய்யாக் கொடுப்பதற்கான நேரம் ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை முடிவடைந்ததிலிருந்து ஆரம்பிக்கின்றது. அதற்கு முன்னர் அறுப்பதானால் அது உள்ஹிய்யாவாக முடியாது. ஏனெனில், "எவர் பெருநாள் தொழுகைக்கு முன் அறுக்கின்றாரோ அவர் தனது ஆட்டை இறைச்சிக்காக அறுத்ததாகவே கருதிக்கொள்ளட்டும்" என நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். எனவே, அந்த ஆட்டின் இறைச்சி முழுவதையும் தர்மம் செய்தாலும், அவருக்கு உள்ஹிய்யா நிறைவேற்றியதற்கான கூலி வழங்கப்படமாட்டாது. மாறாக, அதற்கு ஸதகா கொடுப்பதற்கான கூலியே வழங்கப்படும். ஏனெனில், உள்ஹிய்யா என்பது தொழுகையைப் போன்றதொரு வணக்கமேயாகும். நாம் தொழுகையினை எவ்வாறு குறிப்பிட்ட நேரத்தில் நிறைவேற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமோ, அதே போன்றுதான் உள்ஹிய்யாவையும் அதன் உரிய நேரத்தில் நிறைவேற்ற வேண்டும்.

சில நாடுகளில் உள்ஹிய்யாவுக்கான கால்நடைகள் பெருநாளன்றிரவு அறுக்கப்படுகின்றன. இது தவறாகும். இவ்வாறு செய்வதன் மூலம் உள்ஹிய்யாவை நிறைவேற்றியதற்கான கூலியை இழக்க வேண்டியேற்படுவதோடு, அதனை மீண்டும் நிறைவேற்ற வேண்டியும் ஏற்படுகின்றது. அது நேர்ச்சைக்கான உள்ஹிய்யாவாக இருப்பின் கட்டாயம் மீண்டும் உள்ஹிய்யா கொடுத்தாக வேண்டும்.

பெருநாளன்று அல்லது அதனை அடுத்து வரக்கூடிய இரு நாட்களில் உள்ஹிய்யாக் கொடுக்கலாம். ஐயாமுத்தஷ்ரீக்கின் இறுதி நாளன்றும் கொடுக்க முடியும். ஆனால், ளுஹர் வேளைக்கு முன்னர் அதனை அறுப்பதே மிகச் சிறப்பானது. இதுவே உள்ஹிய்யாவுக்குரிய காலவரையறையாகும்.

ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற கால்நடைகளையே உள்ஹிய்யாக் கொடுக்க வேண்டும். ஓர் ஆட்டை ஒருவருக்காகக் கொடுக்கலாம். ஒருவருக்கு ஓர் ஆடு எனக் குறிப்பிடும்போது, அவர் தனக்காகவும் தன் குடும்பத்தினருக்காகவும் ஓர் ஆட்டைக் கொடுக்க முடியும் என்பதையே குறிக்கின்றது. அபூ அய்யூபில் அன்ஸாரி (ரலி) அறிவிக்கின்றார்: "நபிகளாரது காலத்தில் நாங்கள் ஒவ்வொருவரும் எமக்காகவும், எமது குடும்பத்தினருக்காகவும் ஓர் ஆட்டை உள்ஹிய்யாக் கொடுத்துக்கொண்டிருந்தோம்." எனவே, இதிலிருந்து ஓர் ஆட்டைத் தனக்காகவும், தன் குடும்பத்தினருக்காகவும் ஒருவர் குர்பான் கொடுக்க முடியும் என்பது தெளிவாகிறது.

அதே போல் ஏழு பேர் ஓர் ஒட்டகத்தை அல்லது ஒரு மாட்டை உள்ஹிய்யா கொடுக்கலாம். ஆனால், அது இரு வருடங்கள் பூர்த்தியானதாக இருக்க வேண்டுமென்பது ஒரு நிபந்தனையாகும். மேற்குறிப்பிட்டுள்ள இக்கால்நடைகளே உள்ஹிய்யா கொடுப்பதற்குத் தகுதிவாய்ந்தவைகளாகும்.

உள்ஹிய்யா என்பது இறைவனுக்காகக் கொடுக்கப்படுகின்ற ஓர் அன்பளிப்பாதலால், அதற்காக அறுக்கப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்நடைகள் எவ்விதக் குறைகளும் அற்றனவாகவும், உடல் பருமனுடையனவாகவும் இருத்தல் வேண்டும். மாறாக, நோய்வாய்ப்பட்ட ஆடு, மாடு, ஒட்டகைகளையோ அல்லது நொண்டி, குருடு, செவி துண்டிக்கப்பட்டவை, கொம்புடைந்தவை போன்ற அங்கவீனமானவைகளையோ குர்பான் கொடுக்கக்கூடாது.

எனவே, உள்ஹிய்யாக் கொடுக்கக் கூடிய ஒவ்வொருவரும் இறைவனுக்காக வழங்குகின்ற அந்த அன்பளிப்பை நல்லதாகத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். எனினும் அந்த மிருகத்தின் இறைச்சியோ இரத்தமோ இறைவனைச் சென்றடைவதில்லை. மாறாக, குர்பான் கொடுக்கக் கூடியவர்களது இறையச்சமே இறைவனைச் சென்றடைகின்றது. இறைவன் கூறுகின்றான்: "(இவ்வாறு குர்பான் செய்த போதிலும்) அதன் மாமிசமோ அல்லது அதன் இரத்தமோ, அல்லாஹ்வை அடைந்துவிடுவதில்லை. உங்களுடைய (பரிசுத்தத் தன்மையும்) பயபக்தி(யும்)தான் அவனை அடையும். அல்லாஹ் உங்களுக்கு நேரான வழியை அறிவித்ததற்காக (அவனுக்கு நீங்கள் குர்பான் கொடுத்து) அவனை நீங்கள் பெருமைப்படுத்தும் (பொருட்டு, இவ்வாறு அவைகளை உங்களுக்கு வசப்படுத்தித் தந்தான். நபியே, இவ்வாறு குர்பானி கொடுத்து) நன்றி செய்வோருக்கு நீர் நன்மாராயம் கூறுவீராக.''

(22: 37)

மொழிபெயர்ப்பு: எஸ். ஏ. கே. அப்துர் றாஸிக்

# 18

## பெரும் பாவங்களும் பாவ மன்னிப்பும்

**கேள்வி:** இஸ்லாமிய ஷரீஆவின் பார்வையில் பெரும் பாவங்களாகக் கருதப்படுகின்ற விபச்சாரம், அதனோடு சார்ந்த ஏனைய பாவங்கள், கற்பு நெறி தவறாத பெண்கள் மீது அவதூறு சொல்லல், பிறரின் செல்வத்தை அநியாயமாக விழுங்குதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற பாவங்களுக்காக ஒருவர் பாவமன்னிப்புக் கேட்டால் ஏற்றுக்கொள்ளப்படுமா? பிறரின் செல்வத்தை அநியாயமாக எடுத்துக் கொண்ட ஒருவர் அதனைத் திருப்பிக்கொடுக்கச் சக்தியற்றவராக இருப்பின், இவர் பற்றிய இஸ்லாத்தின் கருத்தென்ன?

பதில்: இஸ்லாமிய ஷரீஆவின் பார்வையில் பெரும் பாவங்களாகக் கருதப்படுகின்ற இத்தகைய பாவங்களுக்காகச் செய்யப்படும் பாவமன்னிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படுமா என்பதில் இஸ்லாமிய சட்ட அறிஞர்களுக்கு மத்தியிலே கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன.

பெரும்பாவங்களுள் முக்கியமானதாக அமைந்திருக்கும் விபச்சாரத்தில் ஈடுபட்ட ஒருவன், தனது தவறை உணர்ந்து வருந்தி மன்றாடி, இனி அத்தகைய தவறுகளில் ஈடுபடுவதில்லை எனத் திடவுறுதி பூண்டு மன்னிப்புக் கேட்டாலும், இது அடியார்களோடு தொடர்பான உரிமைகள் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இருப்பதனால், விபச்சாரத்திற்கு உட்படுத்தப்பட்ட பெண்ணின் குடும்பத்தவர்களிடத்தில் சென்று மன்னிப்புக் கேட்கும் வரை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது, என்ற கருத்துடைய கடுமையான சிந்தனைப் போக்குள்ள அறிஞர்களும் இருக்கின்றனர். அடியார்களுக்கிழைக்கப்படும் அநீதிகளை அவர்கள் மன்னிக்கும் வரை அல்லாஹ் மன்னிக்க மாட்டான் என்பது இஸ்லாத்தின் அடிப்படைக் கருத்தாகும். எனவே, குறிப்பிட்ட பாவத்தைச் செய்தவனை முதலில் பாவத்துக்கு உட்படுத்தப்பட்டவர்கள் மன்னிக்கவேண்டும். அதன் பிறகுதான் பாவமன்னிப்புக்குத் தகுதியானவனாக மாறுகிறான்.

எனினும், இவ்வாறு சொல்வது நடைமுறைச் சாத்தியமற்ற ஒன்றாகும். ஏனெனில், விபச்சாரம் செய்தவர், விபச்சாரம் செய்யப்பட்ட பெண்ணின் தந்தையிடத்திலோ அல்லது கணவனிடத்திலோ சென்று 'நான் உமது மகளுடன் அல்லது மனைவியுடன் விபச்சாரம் செய்தேன்; அதனை மன்னித்துக்கொள்ளுங்கள்' என்று சொன்னால் சில வேளை அவர் கடுமையான கோபத்தின் காரணமாக இவரைத் தண்டித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடலாம் அல்லது கொலையே செய்துவிடலாம். எனவே, மேற்சொன்ன கருத்தைக் கூறிய அறிஞர்களின் வாதத்தை ஏற்றுக்கொள்ள முடியாதிருக்கின்றது.

விபச்சாரம் இறைவனோடு தொடர்பான உரிமைகளைச் சார்ந்தது எனக் கூறிய இஸ்லாமிய சட்ட அறிஞர்கள், குறிப்பிட்ட தவறைச் செய்தவன் தனது தவறை உணர்ந்து, வருந்தி பச்சாதாபப்பட்டு மன்னிப்புக் கேட்டால், அல்லாஹ் அவனை மன்னித்து அபயமளிக்கக்கூடும் என்ற கருத்தைக் கொண்டிருந்தனர்.

கற்புநெறிபிறழாப் பெண்களை அவதூறு சொல்லிக் களங்கப்படுத்துவதை இஸ்லாம் மிகக் கொடிய பாவமாகக் கருதுகின்றது. இம்மையிலும், மறுமையிலும் அழிவையும், நஷ்டத்தையும் கொண்டு வரக்கூடிய ஏழு பெரும் பாவங்களுள் ஒன்றாகவும் இது காணப்படுகின்றது. இதுபற்றி அல்குர்ஆன் இப்படிச் சொல்கின்றது:

''கற்புநெறி தவறாத அப்பாவி முஃமின் பெண்கள் மீது அவதூறு சொல்பவர்கள் இவ்வுலகிலும், மறு உலகிலும் சபிக்கப்பட்டவர்களே. அவர்களுக்கு மிகப் பெரிய வேதனை இருக்கிறது. அந்நாளையில் அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றிற்காக அவர்களது கைகளும், நாவுகளும், கால்களும் அவர்களுக்கு எதிரான சாட்சியங்களாக இருக்கும்.''
(24:22, 23)

அவதூறு சொல்வதற்கான உலகத் தண்டனை 80 கசையடிகளாகும். இது இஸ்லாம் வழங்கும் சடரீதியான தண்டனையாகும். இவனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பது இவனது சுய கௌரவத்தையும் நன்னம்பிக்கையையும் தன்மானத்தையும் நீக்கி, சாட்சியைக் கூட ஏற்றுக்கொள்ளாத அளவுக்கு சமூகத்தில் இழிந்தவனாக ஆக்கும் தண்டனையாகும். அல்குர்ஆனின் பரிபாஷையில் 'பாஸிக்' என வர்ணிக்கப்படுவது, இஸ்லாமிய ஷரீஆ அவர்களுக்கு வழங்குகின்ற இன்னொரு தண்டனையாகும். இதனை அல்குர்ஆன் இப்படிக் குறிப்பிடுகின்றது:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அத்தகையவர்கள் அக்கிரமக்காரர்களே (பாவிகள்). எனினும், இதற்குப் பிறகு தனது தவறை உணர்ந்து, பச்சாதாபப்பட்டு [மன்னிப்புக் கேட்டு தம்மைச் சீர்படுத்திக் கொண்டவர்களை அல்லாஹ் மன்னிக்கக்கூடியவனாக இருக்கிறான்; நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவனாகவும், அன்புமிக்கவனாகவும் இருக்கிறான்." (24; 4, 5)

இத்தகைய பாவமன்னிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படுமா என்பதில் சட்ட அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. குறிப்பிட்ட மனிதனின் பாவமன்னிப்பு ஏற்றுக்கொள்ளப்படுவதற்குச் சில நிபந்தனைகள் அவசியம் என்பது அவர்களின் கருத்தாகும்.

இங்கு அல்லாஹ்வோடு தொடர்பான உரிமையும், அவதூறு சொல்லப்பட்ட பெண்ணோடு தொடர்பான உரிமையும் கலந்து காணப்படுகின்றது. எனவே, அல்லாஹ் அவனை மன்னித்து ஏற்றுக்கொள்ள வேண்டுமானால், உயர் அந்தஸ்துள்ள மனிதர்கள் முன்னிலையில் குறிப்பிட்ட பெண்ணைப் பற்றி அவதூறு சொல்லியிருப்பின், அவர்கள் முன்னிலையிலேயே தன்னைப் பொய்யன் என்று பறைசாற்றி ஏற்றுக்கொள்ள வேண்டும்; அல்லது குறிப்பிட்ட பெண்ணிடத்தில் தனது தவறுக்காக மன்னிப்புக் கேட்டு அவளது திருப்தியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இவை சரியாக நிறைவேறும் போதுதான் அவன் பாவமன்னிப்புக்குத் தகுதியுள்ளவனாக மாறுவான்.

உண்மையில் பெண்ணின் கற்பு மிகவும் பெருமதி மிக்கது. அதனைக் களங்கப்படுத்தக்கூடிய வார்த்தைகளைக்கூறும் போது, அது காட்டுத் தீயாகப் பரவிவிடும். அவள் மீதும், அவளது குடும்பத்தின் மீதும், எதிர்காலச் சந்ததிகள் மீதும் அழிக்க முடியாத கறையாகவும், நீக்க முடியாத அவமானச் சின்னமாகவும் அது படிந்துவிடும். இவ்வாறான கொடியதொரு பாவத்தைச் செய்துவிட்டு, "நான் அல்லாஹ்விடத்தில் மன்னிப்புத் தேடுகிறேன்" என்று சொல்வது மாத்திரம் போதாது; தன்னைப் பொய்யன் என்றும், தான் அவள் மீது மிகப் பெரியதொரு பொய்யையே சொன்னதாகவும் கூறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியாகக்கூறிவிட வேண்டும்; அல்லது அப்பெண்ணிடத்தில் மன்னிப்புக் கேட்டு தான் அவளது திருப்தியைப்பெற முயற்சி செய்ய வேண்டும். அவள் மன்னிக்காவிட்டால் 80 கசையடிகளைப் பெற்றுக்கொண்டதன் பிறகே பாவமன்னிப்புத்தேட வேண்டும். அப்போது தான் அது பயன்மிக்கதாக அமையும்.

இஸ்லாமிய விதிமுறைகளுக்குட்படாது, பிறரின் செல்வத்தை அநியாயமாகச் சாப்பிடும் ஒருவர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற பிரச்சினையைப் பொறுத்தவரையில், அல்லாஹ் உடைய பாதையில் போராடி மடிகின்ற ஷஹீதாக இருந்தாலும் சரி, பணரீதியான நடவடிக்கையாக இருந்தால், அதனைத் திருப்பி ஒப்படைக்கும் வரை அவரது பாவமன்னிப்பும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பது தான் எனது கருத்தாகும்.

உண்மையில், ஒருவனது பணத்தைத் திருப்பிக் கொடுப்பது அல்லாஹ்வின் பாதையில் போராடி மடிந்து போவதை விட எவ்விதத்திலும் உயர்ந்ததொரு செயலாக இல்லாவிட்டாலும், ரஸுல் (ஸல்) அவர்கள் இதற்கு மிகவும் அழுத்தம் கொடுத்திருக்கிறார்கள். ஒரு முறை ஒருவர் நபிகளாரிடம் வந்து "அல்லாஹ்வின் தூதரே, நான் அல்லாஹ்வின் பாதையில் கொலை செய்யப்பட்டால் எனது எல்லாப் பாவங்களும் மன்னிக்கப்படுமா?" எனக் கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் 'ஆம்' என்று பதில் சொன்னார்கள். பின்னர் திரும்பிச்சென்ற அம்மனிதரை மீண்டும் அழைத்து, "நான் முன்னர் என்ன சொன்னேன்?" எனக் கேட்டார்கள். அதற்கு அவர் தனது கேள்வியையும், அதற்கு அன்னார் கூறிய பதிலையும் திருப்பிச் சொன்னார். பின்னர் நபி (ஸல்) அவர்கள் "கடனாளியைத் தவிர" என்று கூறினார்கள். கடனாளி தனது கடனைத் திருப்பிக் கொடுக்காமல் இருந்தால், அவர் அல்லாஹ்வின் பாதையில் மடிந்து போன ஷஹீதாக இருப்பினும், அந்தப் பாவம் மன்னிக்கப்படமாட்டாது என்ற கருத்தை நபி (ஸல்) அவர்கள் இங்கே சொல்லிக் காட்டுகிறார்கள். பின்னர், "சற்று முன் தான் இதனை ஜிப்ரீல் (அலை) எனக்கு அறிவித்துச் சென்றார்" எனக் கூறினார்கள். (முஸ்லிம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே கடன்களையும், அமானிதப் பொருட்களையும் உரியவர்களிடம் திருப்பி ஒப்படைப்பது அவசியமாகும், என்பதனை இங்கே புரிந்துகொள்கிறோம்.

இஸ்லாம் தடுத்திருக்கக்கூடிய வழிமுறைகளான ஏமாற்றி மோசடி செய்தல், கொள்ளையடித்தல், வழிப்பறி செய்தல், இலஞ்சமெடுத்தல் போன்ற வழிமுறைகளில் மக்களது செல்வத்தை அநியாயமாகப் பெற்றுக் கொண்ட ஒருவர், 'நான் பாவமன்னிப்புத் தேடுகிறேன்' என்று சொல்வது மட்டும், அல்லது ஹஜ் செய்வது மட்டும் அல்லது போராடி வீரமரணம் அடைவது மட்டும் அவரது பாவத்தை மன்னிப்பதற்குப் போதுமாகாது; மாறாக, அவற்றை உரியவர்களிடம் திருப்பி ஒப்படைத்து, மன்னிப்புக் கேட்டு இதய சுத்தி பெறுவதும் இன்றியமையாததாகும்.

அவற்றைத் திருப்பிக் கொடுக்கச் சக்தியற்றவராக இருப்பின் உரியவர்களிடம் சென்று தனது இயலாமையைக் கூறி மன்னிப்புக் கேட்டு, அவர்களது திருப்தியைப் பெற்றுக் கொள்ளவேண்டும். அவர்கள் மன்னிப்பளிக்க முடியாதென்று கூறி விட்டால், தனக்கு முடியுமான நேரத்தில், வசதி கிடைக்கும் போது அவற்றைத் திருப்பிக் கொடுப்பதாக உறுதியாக நினைத்துக் கொள்ள வேண்டும். அதனை நிறைவேற்ற முன்பு இறந்து போய் விட்டால், மறுமையில் அவர் கொடுக்க வேண்டியவற்றிற்கு அல்லாஹ் பொறுப்பாக இருப்பான். நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவனாக இருக்கிறான்.

மொழிபெயர்ப்பு : எம். நவாஸ் ஸஹ்ரூத்தீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19

## செயற்கைக் கொண்டை அணிதல்

**கேள்வி:** ஒரு முஸ்லிம் பெண் தன்னால் செய்து கொள்ள முடியாது எனக்கருதும் அலங்காரங்களை 'மேக்கப்' (அலங்கார) நிலையங்களுக்குச் சென்று செய்து கொள்வது ஆகுமா? அத்தோடு செயற்கைக் கொண்டை அணிவது ஷரீஅத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளதா? பெண்களின் மூடி மறைக்கப்பட வேண்டிய 'அவ்ரத்'களில் ஒன்றான இயற்கைக் கூந்தலுக்கு ஒரு திரையாக இச்செயற்கைக் கொண்டை அணிவதைக் கொள்ளமுடியாதா?

**பதில்:** சில மதங்களும் கொள்கைகளும் கொண்டுள்ள மிக இறுக்கமான, மனித வாழ்வுக்குச் சங்கடமான, துறவற வாழ்க்கைக்கு எதிராகப் போராடுவதையும், ஒரு நோக்கமாகக் கொண்டுதான் இஸ்லாம் உதயமாகியது. துறவறத்தை ஆதரிக்கும் அத்தகைய மதங்களும் கொள்கைகளும் அழகையும் அலங்காரத்தையும் கூடாதவையெனப் புறக்கணிக்க, இஸ்லாமோ இவற்றை அளவோடு வேண்டி நிற்கின்றது. அல்லாஹ் தனது அடியார்களுக்கு வழங்கியுள்ள அழகைக் 'கூடாது' எனத் தடுப்போரை இஸ்லாம் வெறுக்கின்றது. எனவே தான் தொழுகைக்குப் போகும் போது, "ஆதமுடைய மக்களே! தொழும் இடத்திலெல்லாம் (ஆடைகளினால்) உங்களை அலங்கரித்துக் கொள்ளுங்கள்'' (7: 31) என அல்குர்ஆன் பணிக்கின்றது.

இஸ்லாம் பெண்களின் இயற்கை உணர்வை மதிக்கின்ற மார்க்கமாதலால், ஆண்களைவிடப் பெண்களுக்கு அழகு செய்வதை ஆகுமாக்கியிருக்கிறது. இதனால்தான் ஆண்களுக்கு ஹராமாக்கப்பட்டுள்ள அலங்காரப் பொருட்களான பட்டும், தங்க ஆபரணங்களும் பெண்களுக்கு ஆகுமாக்கப்பட்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், இஸ்லாம், இயற்கைக்கு முரணான சில அலங்காரங்களையும் ஜோடனைகளையும் ஹராமாக்கியுள்ளது. ஏனெனில், அவை அல்லாஹ்வின் படைப்பின் இயல்பை-பண்பை மாற்றுவதாகவும், ஷைத்தான் மனிதர்களை வழி கெடுக்கும் முறைகளில் ஒன்றாகவும் விளங்குகின்றன. ''அல்லாஹ்வின் சிருஷ்டி (களுடைய கோலங்) களைப் பேதப் படுத்தும்படி நிச்சயமாக நான் அவர்களை ஏவுவேன்'' என ஷைத்தான் கூறியிருப்பதை அல்குர்ஆன் எடுத்துக்காட்டுவதை இதற்கு ஆதாரமாகக் காட்டலாம். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "பச்சை குத்திக் கொள்பவனும், பச்சை குத்தி விடுபவனும், புருவ மயிர்களை நீக்கிக் கொள்பவனும் நீக்கி விடுபவனும், பற்களை (அழகு கருதி) அராவிக் கொள்பவனும் அராவி விடுபவனும் தலையின் (இயற்கை) சிகைக்கு மேலதிகமாகச் செயற்கைக் கூந்தலைச் சேர்த்துக் கொள்பவனும், சேர்த்து விடுபவனும் சபிக்கப்பட்டவர்களாவர்.''

பச்சை குத்துவது பழங்காலம் தொட்டு மக்களிடம் இருந்துவருகின்ற ஒரு பழக்கமாகும். இது ஹராமான தொன்றாகும். அவ்வாறே இரு கண்களின் மேலாகவுள்ள புருவ மயிர்களை நீக்குவது அல்லது அதனை நேர்த்தியாக வழித்து விடுவது, தனக்கிருக்கின்ற கூந்தலுக்கு மேலாக வேறு செயற்கையான அல்லது இயற்கையான சிகை அலங்காரங்களைச் சேர்த்துக் கொள்வது அனைத்தும் மேற்படி இறைதூதரின் ஹதீஸின் மூலமாக ஹராமானதாகவும் சபிக்கப்பட்டதாகவும் ஆக்கப்பட்டிருக்கின்றன.

இந்தவகையில், செயற்கைக் கூந்தலை இயற்கைக் கூந்தலோடு சேர்த்துக் கொள்வது, அதற்குத் திரையாக அல்லது மறைப்பாக அமையுமெனக் கருதுவது நடைமுறைக்குப் பொருந்தாத போலி வாதமாகும்.

மேலதிகக் கூந்தலைச் சேர்ப்பது இயற்கைக் கூந்தலுக்கு மேலும் அழகையும் மெருகையும் ஊட்டக்கூடியதாகவே இருக்கும். இது ஒரு வகையில் மோசடியாகவும், தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்ளும் ஒரு நடவடிக்கையாகவும், தம் அழகைக் கூட்டிக் காட்ட எடுக்கும் ஒரு பிரயத்தனமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும், வீண் செலவாகவுமே அமையும். எனவே, இவையனைத்தும் ஹராம் என்பது தெளிவாகும்.

ஸஈத் பின் முஸையப் தெரிவிக்கிறார்: "ஹஸ்ரத் முஆவியா (ரலி) அவர்கள் மதீனாவுக்கு இறுதியாக வந்த சமயத்தில், அவருடன் உரையாடினோம். அப்போது அவர் ஒரு தலைமுடிக் கோலவலையை எடுத்து, 'இத்தகைய தலையலங்கார வேலையை யூதர்களைத் தவிர வேறெவரும் செய்வதை நான் காணவில்லை. இதனை இறைதூதர் (ஸல்) அவர்கள் போலியான ஒரு செயல் எனக் குறிப்பிட்டார்கள் என்றுரைத்தார்."

மற்றோர் அறிவிப்பின்படி, மதீனா மக்களைப் பார்த்து முஆவியா (ரலி) அவர்கள், "உங்களுடைய உலமாக்கள் எங்கே? இத்தகைய தலையலங்காரங்களை நபி (ஸல்) அவர்கள் தடை செய்தார்கள் எனக்கூற நான் கேட்டுள்ளேன். பனூ இஸ்ராயீல்களின் பெண்கள் இந்த மேலதிகச் சிகையலங்காரத்தைக் கைக்கொண்ட போது தான் அழிந்துவிட்டார்கள்" எனக் கூறியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (புகாரி)

இந்த ஹதீஸ் எமக்கு இரு உண்மைகளை உணர்த்துகின்றது.

1. யூத மக்களே இத்தகைய மோசமான செயல்களைச் செய்வோராக அல்லது அறிமுகப்படுத்துவோராக இருந்தனர். பின்னரே அது வழக்கில் வந்து, பரவ ஆரம்பித்தது.

2. நபி (ஸல்) அவர்கள் இத்தகைய செயல்களைப் 'போலியானவை' எனப் பெயரிட்டதோடு 'அவை கூடாதவை' என்றும் ஒதுக்கினார்கள்.

எனவே, செயற்கைக் கொண்டை போடுவது முற்றிலும் ஹராமானதாகும். வெளியில் செல்லும் போது மாத்திரம் அன்றி, வீட்டில் இருக்கும்போதுகூட இதனை அணியக் கூடாது. ஏனெனில், இது சபிக்கப்பட்ட ஒரு செயலாகும்.

அதே நேரம், பெண்கள் வெளியில் செல்லும் போது, தலையை மறைக்காமல் செல்வது கடுமையான ஹராமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தவிதக் கருத்து வேறுபாட்டுக்கும் இடமின்றி அல்குர்ஆன் இதனைத் தெளிவாகக் கூறிவிட்டது. ''தங்கள் அழகையும் (ஆடை, ஆபரணம் போன்ற) அலங்காரத்தையும் வெளிக் காட்டாது மறைத்துக் கொள்ளவும், தங்கள் முன்தானை களால் தமது மார்பையும் மறைத்துக் கொள்ளவும்.'' (24; 31) எனவே, எவரும் இந்த மேலதிக சிகை அலங் காரத்தை தலையை மூடும் 'முக்காடாக'க் கருதிவிடலாகாது.

ஒரு முஸ்லிம் பெண் தன்னை அலங்கரித்துக் கொள்வதற் காக அந்நிய ஆடவர் இருக்குமிடம் போவது மிகப் பாரதூர மான பாவமாகும். எனவே ஒரு முஸ்லிம் பெண்ணை அவளது கணவனும் அவளுக்குத் திருமணம் முடிக்க ஆகாதவர்களும் (மஹ்ரமிய்யத்து) தவிர்ந்த வேறெவரும் தொடுவது ஹரா மாகும். அவ்வாறு தொடத்தக்க வகையில் அவள் தன்னை ஆக்கிக் கொள்வதும் கூடாது. தபரானியில் குறிப்பிடப் படும் ஒரு ஹதீஸ் இதன் பாரதூரமான விளைவை இப்படிக் கூறுகிறது; ''உங்களில் ஒருவர் தனது தலையில் இரும்பு ஆணி யால் அடித்துக்கொள்வது, அவருக்காகாத ஒரு பெண்ணைத் தொடுவதைவிட மேலானது.'' (பைஹகி, தபரானி)

எனவே, ஒரு முஸ்லிம் பெண் தன்னை அலங்கரித்துக் கொள்வதற்காக 'மேக்கப்' (அலங்கார) நிலையங்களுக்குச் செல்வதும், தன்னை அலங்கரித்துக் கொள்வதும் அங்கு அவளை அந்நியர்கள் தொட வாய்ப்பளிப்பதும், அங்கவள் தனித் திருப்பதும் ஹராமானவைதாகும். இவையனைத்தும் இஸ்லாம் வழங்கும் நடைமுறைக்கும் விதிமுறைகளுக்கும் மாற்ற மாக அமைவதால் தடைசெய்யப்படுகிறது.

எனவே, ஒரு முஸ்லிம் பெண்ணின் செயல்கள் இறை திருப்தியை மையமாக வைத்து அமைதல் வேண்டும். இந்த வகையில் அவள் தன்னைத் தனது வீட்டில் இருக்கும் சமயங் களில் ஷரீஅத் அனுமதித்த வழிகளில் அலங்கரித்துக்கொள்ள லாம். ஏனெனில், அவளின் அழகும் அலங்காரமும் தனது கணவனுக்காக அன்றி, பாதையில் செல்வோருக்காக அல்ல.

மொழிபெயர்ப்பு: எம். எச். எம். தாஹா, நளீமி, பி. ஏ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20

## முஸ்லிம் பெண்களின் உடை

**கேள்வி:** சில ஆசிரியைகள் அரைகுறை ஆடை அணிந்து செல்வதைப் பார்க்கின்றேன். இவ்வாறு அணிவதனை இஸ்லாம் தடுக்கவில்லையா? இஸ்லாம் பெண்களுக்கு அனுமதித்துள்ள ஆடையின் வரையறை யாது?

**பதில்** இஸ்லாம் மிகத் தெளிவாக விளக்கியுள்ள இத்தகைய அம்சங்கள் பற்றி முஸ்லிம் பெண்கள் வினுக்களை எழுப்புவது கவலைக்குரிய விடயமாகும். தெளிவற்ற, மயக்கமான விடயங்கள் தொடர்பாகக் கேள்விகளை எழுப்புவது உண்மையில் நியாயமானதுதான். ஏனெனில் ரஸூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "தடுக்கப்பட்டவைகளும், ஆகுமாக்கப்பட்டவைகளும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. ஆனால், மக்களில் அதிகமானோரால் புரிந்து கொள்ள முடியாத, மயக்கமானதும், சந்தேகத்துக்குரியதுமான அம்சங்கள் அவை இரண்டிற்கும் இடையில் காணப்படுகின்றன. (புகாரி, முஸ்லிம்)

சில அறிஞர்கள் இதனை நகைச்சுவையாகத் தெளிவுபடுத்துகிறார்கள். பூனைக்குக்கூட தடுக்கப்பட்டவைக்ள் எவை என்றும், ஆகுமாக்கப்பட்டவை எவை என்றும் நன்கு தெரியும். நாம் ஓர் இறைச்சித் துண்டை அதற்குக் கொடுத்தால் அது மிகவும் அமைதியாக அமர்ந்து அதனைச் சுவைத்துச் சாப்பிடுவதையும், எங்கேனும் இருந்து ஓர் இறைச்சித் துண்டைத் திருடிக் கொண்டு வந்தால் பயத்துடனும், ஒளிந்து மறைந்து சாப்பிடுவதையும் அவதானிக்கிறோம். இதிலிருந்து மிருகங்கள் கூடத் தமது இயல்புக்கு ஏற்ப, தடுக்கப்பட்டவற்றையும், ஆகுமாக்கப்பட்டவற்றையும் அறிந்து நடப்பதைக் காண்கிறோம். அப்படியாயின், மனிதன் இவ்விடயத்தில் எவ்வளவு ஜாக்கிரதையாக் நடந்துகொள்ள வேண்டும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனையோ விடயங்கள் எமக்குத் தெளிவற்றனவாக இருந்த போதிலும்கூட, இன்று தெளிவாக விளக்கப்பட்டுள்ளவற்றிலேயே தெளிவை வேண்டி நிற்கும் அநேகரை நாம் காண்கிறோம். மேலுள்ள வினாவும் இவ்வகையைச் சேர்ந்தது என்பதில் சந்தேகமில்லை.

பிறர் முன்னிலையில் முஸ்லிம் பெண்மணிகள் இஸ்லாம் வரையறுத்துக்கூறிய ஆடையில்லாமல் நடமாடுவது ஹராம் (தடுக்கப்பட்டது) என்பதில் கிஞ்சித்தும் சந்தேகம் கொள்ளவோ, இரு கருத்துக் கொள்ளவோ முடியாது. வினாவில் தரப்பட்டுள்ளது போன்று, ஆசிரியைகளோ அல்லது பிற பெண்களோ அவ்வாறு நடந்து கொள்வது அத்தகைய ஆடைகளை அணியலாம் என்பதற்கு ஆதாரமல்ல. பெண்கள் மாத்திரமே இருக்கின்ற பாடசாலைகளின் ஆசிரியைகளைப் பொறுத்தவரையில், பாதையிலும் அவர்கள் மாத்திரமே செல்வதாக இருந்தால், தமது ஆடை அணிகளில் சிறிதளவு அஜாக்கிரதையாக இருப்பதில் தவறில்லை. எனினும், ஆண்களும், பெண்களும் சரிசமமாக நடமாடக்கூடிய பாதையாக இருப்பின், ஒருபோதும் இவ்வாறு ஆடைகளை அணியக்கூடாது. பெண்கள் மட்டும் இருக்கின்ற இடங்களில் பூரண சுதந்திரத்தோடு இருக்க முடியும் என்பது இதன் பொருளல்ல. அதற்கும் குறிப்பிட்ட வரையறைகளை இஸ்லாம் வகுத்துள்ளது. நாம் இன்று காண்கின்ற பாரம்பரிய ஒழுக்க நெறிமுறைகளுக்கும், பகுத்தறிவுக்கும், மதச் சிந்தனைகளுக்கும் முரணாக யூதர்களால் தயாரிக்கப்படுகின்ற மார்புகள் வெளிப்படும் அளவுக்கு அமைந்துள்ள மார்புக் கச்சைகளை அணிந்து கொண்டு நடமாடுவதனை இஸ்லாம் கண்டிக்கின்றது தீய உணர்ச்சிகளைத் தூண்டிவிடுவதன் மூலம், ஒழுக்கப் பண்பாட்டு நெறிமுறைகளையும், உயர் மாண்புகளையும் நிர்மூலமாக்கி, மனித சமூகத்தைத் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதற்குத் திட்டமிட்டுச் செயற்படும் யூதர்கள் இத்தகைய விடயங்களில் கூடிய கவனம் செலுத்துகின்றனர். காலத்துக்குக்காலம் புதுப் புது மோஸ்தர்களை உருவாக்குவதன் மூலம் பெண்களின் சிந்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோடு அவர்கள் விளையாடுகின்றனர். இவையெல்லாம் சியோனிஸ சிந்தனைகளின் கண்டுபிடிப்புகளாகும். முழங்கால்களுக்கு மேலால் எந்தளவுக்கு ஆடையைக் குறைக்கலாம்? தோள்களும், மார்பும் தெரியுமளவுக்கு ஆடையைச் சுருக்கலாமா? போன்றன வெளியில் நடமாடுகின்ற ஓர் இஸ்லாமியப் பெண்மணியின் இதயத்தில் என்றுமே எழக்கூடாத கேள்விகளாகும்.

இஸ்லாமிய நங்கையரைப் பொறுத்தவரையில், நாணத்தோடும், கண்ணியத்தோடும் அல்லாஹ்வின் கட்டளைப்படி வாழ வேண்டும். இதனை அல்குர்ஆன் பின்வருமாறு விளக்குகிறது: "நபியே! முஃமினான பெண்களுக்குத் தமது பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளுமாறும், தமது மர்மஸ்தானங்களைப் பேணிக் கொள்ளுமாறும், இயல்பாக வெளிப்படுகின்ற பகுதிகளைத் தவிர ஏனையவற்றை வெளிக்காட்டாமலும், தமது மேலாடைகளை மார்புகளின் மீது போட்டுக் கொள்ளுமாறும், தமது அழகைத் தமது கணவன்மார்களுக்கும் அவர்களின் தந்தைகளுக்கும், தமது தந்தைகளுக்கும் தவிர வேறு எவருக்கும் காட்டக்கூடாதென்றும் கூறுவீராக!" (24:31)

இயல்பாக வெளிப்படக்கூடிய பகுதிகளைத் தவிர ஏனைய பகுதிகளைப் பிறருக்கு வெளிப்படுத்துவது முஸ்லிம் பெண்களுக்குத் தடுக்கப்பட்டதாகும். இயல்பாக வெளிப்படும் பகுதிகள் என்றால் என்ன என்பதை விளக்கும் கருத்துகளில் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களின் விளக்கமே எமது இன்றைய சூழ்நிலைக்கு மிகவும் பொருத்தமானதாகவும், இலேசானதாகவும் அமைந்திருக்கிறது: அவரின் கருத்துப்படி "மா ழஹர மின்ஹா" (இயல்பாக வெளிப்படக்கூடிய பகுதிகள்) என்பது முகத்தையும் மணிக்கட்டுகளையும் குறிக்கிறது.

நாம் இன்று பல நாடுகளிலும், நகர்களிலும் காண்கின்ற அமைப்பில் பெண்கள் ஆடையணிவதைப் பகுத்தறிவோ, மதங்களோ அல்லது ஒழுக்கவியல் கோட்பாடுகளோ ஒரு போதும் ஏற்றுக் கொள்ளாது. இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் பெண்களின் உடை எவ்வாறு அமைய வேண்டும் என்பதனை எனது "அல் ஹலால் வல் ஹராம் பில் இஸ்லாம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் நூலில் விரிவாக விளக்கியிருக்கிறேன். அதனையே இங்கும் குறிப்பிடுகிறேன்.

ஒரு பெண் இஸ்லாமிய ஷரீஆவின் ஒழுக்க வரம்புகளைப் பேணி நடப்பதாயின், அவளது ஆடை கீழ்வரும் பண்புகளைப் பெற்றிருப்பது இன்றியமையாததாகும்.

1. குர்ஆன் விதிவிலக்களித்த பகுதிகள் தவிர மற்றைய எல்லாப் பகுதிகளும் மூடப்படவேண்டும். (முகம், மணிக்கட்டுக்கள் தவிர)

2. மேனியழகு புலப்படக்கூடிய அளவுக்கு மெல்லியதாக ஆடைகள் அமையக் கூடாது. ரஸூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''நரகத்தில் சில பெண்கள் இருப்பார்கள். அவர்கள் உலகத்தில் ஆடையணிந்த நிர்வாணிகளாகவும், பிறரை மையல் கொள்ளச் செய்யும் விதத்தில் நடந்துகொண்டவர்களாகவும் இருப்பார்கள். இவர்கள் சுவனத்தில் நுழைய மாட்டார்கள், அதன் வாசனையைக்கூட நுகரமாட்டார்கள்.'' (முஸ்லிம்)

''காஸியாத் ஆரியாத்'' என்ற பதம் உடலின் நிறம், அமைப்பு, கவர்ச்சி என்பவற்றை வெளிக்காட்டக்கூடிய விதத்தில் ஆடையணியும் பெண்களைக் குறிக்கும். ஒரு முறை பனூதமீம் கோத்திரப் பெண்களில் சிலர் மிக் மெல்லிய ஆடையணிந்து கொண்டு ஆயிஷா நாயகியிடம் வந்தபோது அவர் இப்படிக் கூறினார்: ''நீங்கள் மூஃமினான பெண்களாக இருந்தால் நீங்கள் அணிந்திருக்கும் ஆடைகள் இஸ்லாமியப் பெண்களின் ஆடைகளல்ல என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.'' இன்னொரு முறை மெல்லிய மேலாடை அணிந்த ஒரு மணப்பெண் ஆயிஷா நாயகியிடம் வந்தபோது ''சூரதுன் நூரை ஏற்றுக் கொள்ளாத ஒரு பெண்தான் இத்தகைய ஆடையை அணிவாள்'' எனக் கூறினார். கண்ணாடி போன்றிருக்கும் இக்கால ஆடைகளை ஆயிஷா (ரலி) கண்டால் என்ன சொல்வாரோ?

3. அங்க அழகினையும் உடம்பின் வளைவு, சுழிவுகளையும் தெளிவாக எடுத்துக் காட்டக்கூடிய கனைத்த உடைகளாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதல் கூடாது. மேற்கத்திய நாகரீகம் அறிமுகப்படுத்துகின்ற நவீன ஆடைகள் மெல்லியனவாக இல்லாவிட்டாலும், அங்க அமைப்புக்களைத் தெளிவாகக் காட்டக்கூடிய விதத்தில் இறுக்கமானவைகளாக அமைந்திருக்கின்றன. பார்ப்போரின் உணர்ச்சிகளைத் தூண்டி விடக் கூடியனவாக அமைந்திருக்கும் இத்தகைய ஆடைகளும் இஸ்லாத்தில் முற்றாகத் தடுக்கப்பட்டவைகளாகும். இத்தகைய ஆடைகளை அணிகின்ற பெண்களையும் மேற்சொன்ன ஹதீஸ் நரகவாசிகளாக வர்ணித்தது. மிக மெல்லிய ஆடைகளைவிட இத்தகைய ஆடைகள் உடலின் உட்பகுதிகளைக் காட்டக்கூடியனவாக இல்லாவிட்டாலும் ஒழுக்கக்கேடுகளுக்கும், பிரச்சினைகளுக்கும் மிக முக்கிய காரணிகளாக அமைந்துவிட முடியும்.

4. ஆண்கள் அணிகின்ற வகையான ஆடைகளாக அமையக்கூடாது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் வித்தியாசமான அமைப்புக்களில் பிரத்தியேகமான ஆடைகள் உண்டு. ஆண்கள் அணிகின்ற ஆடைகளைப் பெண்களோ அல்லது பெண்கள் அணிகின்றவற்றை ஆண்களோ அணிவது இஸ்லாமிய ஷரீஅத்துக்கு முரணானதாகும். ஏனெனில், பெண்களைப் போல் வேஷம் போடுகின்ற ஆண்களையும், ஆண்களைப்போல் வேஷம் போடுகின்ற பெண்களையும் ரஸூல் (ஸல்) அவர்கள் சபித்திருக்கிறார்கள். ஆண்கள் பெண்களைப் போன்று அணியவோ அல்லது பெண்கள் ஆண்களைப் போல் அணியவோ இஸ்லாம் அனுமதிக்காது. ஏனெனில், அல்லாஹ் அங்க உறுப்புக்களின் வேறுபாடுகளோடு ஆண் இனத்தையும், பெண்ணினத்தையும் வாழ்க்கையில் வித்தியாசமான பொறுப்புக்களையும் கடமைகளையும் வழங்குவதற்காகப் படைத்திருக்கிறான். மனிதர்களை அல்லாஹ் படைத்திருக்கின்ற இயல்பான இயற்கைப் பண்புகளை விட்டுப் பிறழச் செய்வது பொருத்தமானதல்ல. ஏனெனில், ஒரு பெண் ஆண்வேடமிடும்போது பெண் என்கின்ற வெளித்தோற்றங்களில் இருந்து ஆணின் தோற்றத்துக்கு வெளிப்படையாக மாறுகிறாள். அவ்வாறே ஓர் ஆண், பெண் வேடமிடும் போது ஆண் என்கின்ற தனித்துவப் பண்பில் இருந்து பெண்ணின் தோற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றத்துக்கு மாறுகிறான். இருவரும் அடிப்படை இனப் பண்பு களை மாற்றிக் கொள்கின்றனர். ஒவ்வோர் ஆணும் பெண் ணும் தான் அடிப்படையாகப் பெற்றிருக்கும் இயல்புகளை யும், இயற்கையம்சங்களையும் கருத்திற் கொண்டு தத்தமக்கு இடப்பட்டுள்ள வரையறைகளை மீறாமல் வாழ வேண்டும் என்று தான் இஸ்லாம் எதிர்பார்க்கின்றது.

பெண்கள் தமக்கேயுரிய ஆடைகளை அணியாமல் பிற ஆடைகள் அணிவதை இஸ்லாம் ஷரீஆவுக்கு முரணான செய லாகவே மதிப்பிடுகின்றது. இவையெல்லாம் பெண்களுக்கு வழங்குகின்ற இஸ்லாமிய அமைப்பிலான ஆடைகளாக அமைய முடியாது. எப்போது மனித சமூகம் இந்த உண்மை களைப் புரிந்து கொண்டு நேர்மையுடனும், நீதமாகவும் இஸ்லாமிய வரையறைகளைப் பின்பற்றுமோ, அப்போது சுபீட்சமும் அமைதியும் நிறைந்த வாழ்வை அனுபவிக்க முடி யும். இதற்கு மாறாக, நவீன நாகரிகம் காலமாற்றங்களுக் கேற்ப வழங்கி வரும் புதுப்புது ஆடையலங்கார முறைகளை யும் பாஷன்களையும் பின்பற்றி, ஆண்களின் கீழான உணர்ச்சி களைத் தூண்டிவிடவும் அவர்களைப் பலவீனமானவர்களாக, சிந்தனையற்றவர்களாக ஆக்கிவிடவும் பெண்ணினம் ஒரு போதும் முயலக்கூடாது.

ஒரு காலத்தில் ஆண்களே பெண்கள் மீது அதிகாரம் செலுத்தி, ஒழுக்க வரம்புகளை மீறாமல் அவர்களைப் பாதுகாக் கும் உரிமை பெற்றவர்களாக இருந்தனர். இன்று அந்நிலை மாறி, பெண்கள் ஆண்கள் மீது அதிகாரம் செலுத்தவும், அவர்களுக்குக் கட்டுப்படாமல் வாழவும் ஆரம்பித்து விட்ட னர். இது நவீன நாகரிகத்தின் மிகப் பெரிய அச்சுறுத்தல் களில் ஒன்றாகும். ஒரு கணவன் தனது மனைவியைப் பார்த்து ''எல்லை மீறாமல் நடந்து கொள்'' என்று சொல்ல முடியாத நிலை இன்று உருவாகியுள்ளது. அதனையும்விட தனது சொந்த மகளைப் பார்த்து இப்படிக் கூறவோ அல்லது ஒழுக்க நெறி முறைகளை மீறாமல் நடந்து கொள்ளுமாறு எச்சரிக்கவோ முடியாத நிலையும் இன்று ஏற்பட்டிருக்கின்றது. அந்தளவுக்கு ஆண்கள் தமது சமானிலும், நம்பிக்கையிலும், மத ஆசாரங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலும் பலவீனமானவர்களாக மாறிவிட்டனர். ஈமான் இல்லாதவர்களாக இருந்தாலும் இத்தகைய மோசமான சக்திகளை எதிர்த்து நிற்கக்கூடிய ஆண்மையுமா இல்லாமற் போய்விட்டது?

இத்தகைய மோசமான ஒழுக்கக் கேடுகளை இல்லாமற் செய்வதற்கு எல்லா ஆண்களும் தமது ஆண்மையையும், தனித்துவத்தையும் அவசியம் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

நவீன நாகரிகத்தின் இத்தகைய பயங்கரமான ஒழுக்கச் சீர்குலைவுகளுக்கு மத்தியில் இஸ்லாமிய உணர்வோடு, இஸ்லாத்தின் உயர் நெறி முறைகளையும், அது பெண்களுக்கு வழங்குகின்ற ஆடை ஒழுங்கையும் பேணி வாழ்கின்ற எண்ணற்ற இஸ்லாமிய நங்கையர்களைக் காணும்போது அல்லாஹ்வின் அருளை நினைத்து நெஞ்சம் பூரிக்கின்றது.

மொழிபெயர்ப்பு: எம். நவாஸ் ஸனூர்தீன்

---

# 21

---

## வங்கியும் சேமிப்பு வைப்புக்கான வட்டியும்

**கேள்வி:** நான் நடுத்தரமான சம்பளம் பெற்று வந்த ஓர் உத்தியோகத்தன். சம்பளத்தில் ஒரு பகுதியை வங்கியிலிட்டு அதற்கு வட்டி பெற்று வந்தேன். இது ஆகுமானதா? ஷெய்க் ஷெல்தூத் இதனை அனுமதித்துத் தீர்ப்பு வழங்கினார் எனக் கூறப்படுகிறது. இது அனுமதிக்கப்பட்டதா என்று அறிஞர்களை வினவியபோது சிலர் ஆகுமானது எனவும் சிலர் கூடாது எனவும் கூறினர். நான் எனது செல்வத்துக்கான ஸகாத்தைக் கொடுத்து வந்தேன் எனினும், நான் ஸகாத் கொடுத்த தொகையைவிட வங்கி வட்டி அதிகமாகவே இருந்தது. இத்தகைய வட்டி அனுமதிக்கப்படவில்லையானால் அந்த வட்டிப்பணத்தை என்ன செய்யலாம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில்: வங்கியில் வைப்பிலிடும் பணத்துக்குப் பெறப்படும் தொகை ஹராமான வட்டியே ஆகும். எத்தகைய உழைப்போ வியாபார முயற்சியோ இன்றி, முதலுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையைப் பெற்று வருவது வட்டி எனப்படுகிறது. எனவே தான் குர்ஆன், ''விசுவாசிகளே, அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள். நீங்கள் முஃமீன்களாயின் எஞ்சியுள்ள வட்டித் தொகையைவிட்டு விடுங்கள். நீங்கள் அவ்வாறு செய்யாவிட்டால், அல்லாஹ்வோடும் அவன் தூதரோடும் யுத்தம் செய்கிறீர்கள் என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். நீங்கள் பாவமன்னிப்புக்கேட்டு மீண்டுவிட்டால், உங்கள் முதல் தொகைகளே உரித்தாகும். நீங்கள் அநியாயம் செய்யவேண்டாம்; அநியாயம் செய்யப்படவும் மாட்டீர்கள்.'' (பகரா- 279) எனக் கூறுகிறது.

முதலை மாத்திரம் பெற்று அதற்கு மேலதிகமாகப் பெறப்படும் வட்டியைப் புறக்கணிப்பதையே பாவ மன்னிப்பு என இங்கே குறிக்கப்படுகிறது. ஏனெனில், முதலுக்கு மேலதிகமாகப் பெறப்படும் தொகை எத்தகைய வியாபார முயற்சியும் இன்றி, தொழில் முயற்சி சம்பந்தமான அபாயங்களுக்கும் உட்படாமலேயே பெறப்படுகிறது. இதுவே வட்டி எனப்படுகிறது.

நானறிந்த வரையில், ஷெய்க் ஷெல்தூத் வட்டியை ஹலால் எனக்கூறித் தீர்ப்பு வழங்கவில்லை. ஒரு தனிமனிதனின் அல்லது சமூகத்தின் நிர்ப்பந்த நிலையில் அது அனுமதிக்கப்படலாம், என்றே அவர் கூறினார். 'நிர்ப்பந்த நிலை' என்பதற்குச் சற்றுக் கூடுதலான இடம் கொடுத்ததாக அவரது விளக்கம் அமைந்துவிட்டது. ஷெய்க் ஷெல்தூத்தின் இந்த விளக்கத்தை நாம் ஏற்கமுடியாது.

மேலும், ஷெய்க் ஷெல்தூத் சேமிப்பு நிதி பற்றியே அனுமதிக்கப்பட்டது என்ற தீர்ப்பை வழங்கினார். சேமிப்பு நிதி வேறு, வங்கி வட்டி வேறு. எனினும், இந்தத் தீர்ப்பையும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது; குறிப்பிட்டளவு முதலிட்டு அதற்கு வரையறுக்கப்பட்ட ஒரு தொகையை இலாபமாகப் பெறுவதை இஸ்லாம் அங்கீகரிக்கவில்லை, ஏனெ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னல், ஒருவன் உண்மையான பங்காளியாக முதலிடின், இலாபம் நட்டம் இரண்டிலும், அவை எவ்வளவாயினும் சரி, பங்கு கொள்ள வேண்டும். இலாபம் சொற்பமாயினும் அதிகமாயினும் அல்லது நட்டம் ஏற்படினும் அவை அனைத்திலும் அவன் பங்குகொள்ளவேண்டும். இதுவே பங்குநாரராக இருத்தல் என்பதன் சரியான கருத்தாகும்.

வங்கி கொடுக்கும் வட்டியைப் பெறுவதைப் பொறுத்தவரை, இது ஹலால் அன்று. வங்கியில் இடப்பட்ட பணத்திற்கு ஒருவர் ஸகாத் கொடுத்தபோதிலும், இந்த வட்டிப் பணம் அனுமதிக்கப்படமாட்டாது. அப்படியானால், இந்த வட்டித் தொகையை என்ன செய்வது?

ஹராமான செல்வம் சொத்தாகமாட்டாது. எனவே, அது ஸதகாவாகச் செலவிடப்படவேண்டும். இதுவே தலைசிறந்த இஸ்லாமிய சட்ட அறிஞர்களின் கருத்தாகும். எனினும், பேணுதலான மனப்பாங்குடைய சிலர் இந்த வட்டித் தொகையை ஸதகாக் கொடுக்கும் நோக்குடனும் பெறக்கூடாது எனவும், அதனை விட்டுவிட வேண்டும் அல்லது அதனைப்பெற்றுக் கடலில் எறிந்துவிட வேண்டும் எனவும் கருதுகின்றனர். ஏனெனில் பரிசுத்தமற்ற செல்வத்தை ஸதகா செய்ய முடியாது என இவர்கள் கூறுகின்றனர்.

ஆனால், இக்கருத்து, செல்வம் எவருக்கும் பிரயோசனப்படாத வகையில் வீணாக்கப்படக்கூடாது என விளக்கும் ஷரீஅத்தின் விதிகளுக்கு மாற்றமானதாகும். அச்செல்வம் எவருக்கும் சொந்தமானதல்ல என்ற வகையில், அதனைப் பெற்று ஏழைகளுக்கோ அல்லது ஒரு நற்காரியத்துக்கோ அல்லது இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கும் நன்மை பயக்கக் கூடிய ஒரு விடயத்திற்கோ செலவிடமுடியும். ஏனெனில், ஹராமான செல்வம் யாருக்கும் சொந்தமானதல்ல. வைப்பிலிட்டவருக்கோ அல்லது வங்கிக்கோ கூட அது சொந்தமாகாது. அது பொதுநலன்களுக்கே உரிய செல்வமாகும். ஹராமான செல்வங்கள் அனைத்தைப் பொறுத்தவரையிலும் இதுவே இஸ்லாத்தின் கண்ணோட்டமாகும். அந்த ஹரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான செல்வத்திலிருந்து ஸகாத் கொடுப்பதால் அதனைத் தூய்மை பெறச் செய்ய முடியாது. செல்வம் தூய்மை பெறுவதற்கு ஹராமாகச் சம்பாதிக்கப்பட்ட பகுதி அதிலிருந்து நீக்கப்பட வேண்டும். எனவேதான் இறைதூதர் (ஸல்) அவர்கள் ''பொதுச் செல்வத்திலிருந்து மோசடியாகப் பெறப்பட்ட செல்வத்தில் இருந்து கொடுக்கப்படும் ஸதகா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது'' (முஸ்லிம்) என்றூர்கள். இந்தச் செல்வம் ஸதகாக் கொடுப்பவனின் சொத்தல்ல. எனவே தான் அல்லாஹ் அந்த ஸதகாவை ஏற்றுக்கொள்வதில்லை.

வட்டிப்பணம், வைப்பில் இட்டவனுக்கு ஹராம் என்ற வகையில், அதனை வங்கியிலேயே விட்டுவிடலாமா என்று ஒரு கேள்வி எழமுடியும்.

வட்டிப் பணத்தை வங்கியில் விட்டுவிடக் கூடாது. அவ்வாறு விட்டுவிடுவது வட்டித்தொழில் முயற்சியில் இயங்கும் வங்கியை மேலும் பலப்படுத்துவதாகவே அமையும். எனவே, அதனைப் பெற்று ஏதாவதொரு நற்காரியத்துக்காகச் செலவிடவேண்டும்.

வங்கி சில சந்தர்ப்பங்களில் முறிவடையலாம். இந்நிலையில் வைப்பிலிட்டவன் நஷ்டத்தைப் பொறுப்பேற்கிறுன். எனவே, பெறப்படும் வட்டி ஹலாலாக முடியாதா? எனச் சிலர் கேட்கின்றனர்.

வங்கி முறிவடையக்கூடிய சூழ்நிலை மிக அருமையாகவே நிகழும். அருமையான நிகழ்வுகளின் அடிப்படையில் சட்டம் இயற்றப்படுவதில்லை. பொதுவான நிலை, வங்கிகள் முறிவடையாது தொடர்ந்து இயங்குவதும், வட்டித்தொகை தொடர்ந்து கிடைத்துக்கொண்டிருப்பதுமாகும். இப்பொதுவான நிலையின் அடிப்படையிலேயே சட்டமும் அமைதல் வேண்டும்.

வைப்பிலிடப்படும் தொகையைக் கொண்டு வங்கி தொழில் முயற்சிகளில் ஈடுபடுகிறது. எனவே, இலாபத்திலும் பங்குபெற முடியும் தானே எனச் சிலர் வினவலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம். வைப்பில் இடுவோன் தொழில் முயற்சியில் பங்கு கொள்ளல் என்ற அடிப்படையில் பங்காளியாக இருந்து, ஓர் ஒப்பந்தத்தின் கீழ் இலாப-நட்டங்களைப் பகிர்ந்து கொள்ள முன்வரின் இக்கேள்வி நியாயமானதே. ஆனால், நடைமுறை நிலை என்னவெனில், வங்கி முறிவடைந்தபோது வைப்பிலிட்டோர் தம் முழுத்தொகைப் பணத்தையும் திருப்பிக் கேட்பர். அவ்வாறு கேட்பதை வங்கி நிராகரித்து விடுவதில்லை. வங்கி அவர்களது பணத்தைப் பகுதி பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ கொடுக்க முன்வரும்: எனவே, வைப்பிலிட்டோர் தம்மை இலாப நட்டத்தில் பங்குகொள்ளும் பங்குதாரர்களாகத் தம்மைக் கருதவில்லை என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

மொழிபெயர்ப்பு: எம். ஏ. எம். மன்ஸுர், நளீமி பீ.ஏ. (சிறப்பு)

பொது நூலகம்
18 SEP 1990
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
கொழு

## ரேஷ்மா பதிப்பகத்தின் வெளியீடுகள்

1. வியாபாரக் கொடுக்கல் வாங்கலில்
   ஹலாலும் ஹராமும் ... ...
   — யூஸுப் அல்-கர்ளாவி

2. உணவுப் பொருள்களில்
   ஹராமான கலப்படங்கள் ... ...
   — ஸீ. எம். ஏ. அமீன்

3. முயலாரின் சாகசங்கள்
   — கிருஷ்ண சந்தர் ... 18.00

4. இந்திய கிராமியக் கதைகள்
   — ~~ஸீ. எம். ஏ. அமீன்~~ ... 23.00

5. ஹலாலும் ஹராமும்
   - அடிப்படை விதிகள் ...
   — யூஸுப் அல்-கர்ளாவி ... 10.00

**Reshma Publishing House**
348/1, Warapalana Road,
Thihariya - Kalagedihena.

**Price Rs.** 23.00

ISBN 955-95179-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

... DEVELOPRINT Colombo-9.

DATE: 2016-2017